
www.padippakam.com

# கவிதாசரண்

தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்

மே, 1993 விலை ரு.3.

## உள்ளே ஓர் அலசல்!



பிடியில்

தமிழ் இலக்கியமும்


படிப்பகம்

www.padippakam.com

# பயிர்

பறவையைப் பிடிக்கவே வலையை விரிக்கிறான் வேடன். பறவை வலையில் விழும்போதுதான் சிறைப்படுகிறது. ஆனால் வேடனோ, வலையை விரித்தபோதே அதில் சிறைப்பட்டுப் போகிறான். வெளியெங்கும் சிறகடித்தேகும் பறவைகளோடு வலசை போய்க்கொண்டிருந்த அவனது மனம் இப்போது வலைக்குள் விழப்போகும் பறவைக்காக வலைக் கண்ணிகளிலேயே சிறையிருக்கிறது.

சிலந்தி தன் இரையைப் பிடிக்கவே வலை பின்னுகிறது. பின்னிய வலையில் இரை வந்து விழுவது பின்னால் நடக்கிற காரியம். ஆனால், பின்னும்போதே தன்னை வலைக்குள்ளே வைத்து எல்லை கட்டிக் கொள்கிறது சிலந்தி. வலைக்கு வெளியே இரைகள் ஆயிரம். ஆனால், வலைக்குள் மட்டுமே அதன் தேடலின் முடக்கம்.



எதனைப் பிடிக்கவும் பொறி அமைக்கிறவன் முதலில் தன்னைத்தான் அப்பொறிக்குள் சிக்க வைத்துக் கொள்கிறான்.

சூழ்நிலையின் சிற்பியாகத் தன் பயணத்தைத் தொடங்குகிறவன் அதன் கைதியாகிப் போவது இப்படித்தான்.

இலட்சியமென்பது ஒரு சிறைப்படல்தான்.

'வெளி'யில், அகண்ட பரப்பில், தான் ஒரு தூசாகச் சிறுத்துப் போவதைக் காட்டிலும் சிறையின் சுவர்களுக்குள் தன்னை ஒரு தீரனாய் உருப்பெருக்கிப் பார்த்துக் கொள்வது சுகமான விஷயம்தானே.

படிப்பகம்

www.padippakam.com

கவிதாசரண்

தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்

மே, 1993

மாதத்தின் முதல் வாரத்தில் வெளி வருகிறது.

தனி இதழ் விலை ரூ. 3.
ஆண்டுச் சந்தா ரூ. 36.
சந்தாவை M.O. செய்க.

மனித நேயம் வளர்க்கும் இலக்கியத் தெளிவின் ஊற்றுக்கண்.

---

படைப்புகளை அனுப்ப மற்றும் தகவல் தொடர்புகளுக்கு:

ஆசிரியர், கவிதாசரண்,
31, டி.கே.எஸ். நகர்
சென்னை-600 019.

---

திறனாய்வுக்குப் புதிய நூல்கள் மட்டுமே ஏற்கப்படுகின்றன.

இதழை 580, T.H.Road, சென்னை-21 இலிருந்து வெளியிடுபவரும் ஆசிரியரும்: கவிதாசரண். ஆல்வெல் பிரஸ், 31, T.K.S. நகர், சென்னை-19 இல் அச்சிடுபவர்: திருமதி கவிதாசரண்

படைப்பாளர்களே தங்கள் படைப்புகளுக்குப் பொறுப்பேற்கிறார்கள்.

வெளியிடுவதற்கு ஏற்கப்பட்டவற்றைத் திருத்தவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

“

# பெரியாருக்கு நேர்ந்த அபசகுனம்

22-4-1993ஆம் நாள் தமிழக சட்டப் பேரவையில் நடந்தது:

ஆலயப் பராமரிப்பு நிதிக்காக பேரவை உறுப்பினர்கள் அளித்த நன்கொடைக்கான காசோலையை முதல்வரிடம் தந்த போது, அவையிலுள்ள பெரியார் படத்தின் கீழ் மாட்டியிருந்த, “பகுத்தறிவுநெறியே பண்பட்ட நெறி” என்னும் பெரியாரின் பொன்மொழி வாசகப் பலகை தானாகக் கழன்று விழுந்தது.

நன்றாயில்லை?

இன்றைய தமிழகத்தில் பெரியாரும் வழிபாடும் இப்படியானதோர் அபசகுனமாய் உறவாட நேர்ந்த பின்னர் அவருடைய பொன்மொழிகள் கழன்று விழ வேண்டும்தான்.

”

படிப்பகம்

www.padippakam.com

பூட்டைத் திறப்பது கையாலே—நல்ல
மனந் திறப்பது மதியாலே"
பாட்டைத் திறப்பது பண்ணாலே — இன்ப
வீட்டைத் திறப்பது பெண்ணாலே.

ஏட்டைத் துடைப்பது கையாலே — மன
வீட்டைத் துடைப்பது மெய்யாலே
வேட்டையடிப்பது வில்லாலே — அன்புக்
கோட்டை பிடிப்பது சொல்லாலே.

காற்றை யடைப்பது மனதாலே — இந்தக்
காயத்தைக் காப்பது செய்கையிலே,
சோற்றைப் புசிப்பது வாயாலே — உயிர்
துணி வுறுவது தாயாலே.

*—மகாகவி பாரதியார்*


*விளம்பர உதவி:*

# ஏ பி டி பார்சல் சர்வீஸ்

- பொருள் போக்குவரத்து சம்பந்தமான
அனைத்து பிரச்சனைகளுக்கும் சுலபமான தீர்வு
**ஏ பி டி பார்சல் சர்வீஸ்**

- இருபத்தைந்து ஆண்டுகளாக வணிகப்
பெருமக்களின் நம்பிக்கைக்குரிய தேர்வு
**ஏ பி டி பார்சல் சர்வீஸ்**

- உங்களுக்கு ஏற்றதொரு பார்சல் சர்வீஸ்
**ஏ பி டி பார்சல் சர்வீஸ்**

எங்களது சேவையை உங்களுக்கும் தொடர
எங்களுக்கு ஓர் வாய்ப்புத் தாரீர்!
குறைந்த கட்டணம்... விரைந்த சேவை.

# ஏ பி டி பார்சல் சர்வீஸ்

10/13-15, காளிங்கராயன் தெரு,
ராம்நகர், கோவை-641009.




படிப்பகம்

www.padippakam.com

என்னைத் தமிழ் அன்னை பெற்றாள்,
ஏடெடுத்து வாழ்ந்திருப்பேன்;
இன்னுயிரைத் தோற்ற பின்னே
என் குழியில் பூத்திருப்பேன்.

கவிதாசரண்
தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்

மலர் இரண்டு மே, 1993 இதழ் ஐந்து

# "மொழி அகதிகள்" பிடியில்...

நான் ஒன்றும் தனித்தமிழ் இயக்கவாதியல்ல.

இலக்கணம் மீறி எதுவும் நடந்துவிடக்கூடாது என்று இருட்டில் முழங்கும் குருட்டுப் பண்டிதனும் அல்ல:

தமிழகத்தைத் தமிழன் தவிர வேறெவனும் சுரண்டக் கூடாது என்று தத்துவம் பேசும் அரசியல்வாதியுமல்ல.

இன்றைய தமிழை, அதன் எல்லா நிறை—நிறையின்மைகளோடும், பழக்கத்தால் இயல்பாகிப் போன மொழிக் கலப்போடும், அறிவியல் யுகத்துக்கேற்ற நிகழ் மொழிக் கூறுகளை யார் வழங்கினாலும் ஏற்றுக் கொள்கிற நன்றியுணர்வோடும், 'இது என் மொழி; என்னை ஆளாக்கி வளர்க்கும் மொழி' என்று பெருமிதம் கொள்கிற சாதாரணத் தமிழனே.

இந்த என் இயல்பான உணர்வுக்குப் புறம்பானவையாய் என்னைப் பாதிக்கிற விஷயங்கள்தான் இக்கட்டுரைக்கான காரணங்கள்.

O O O

சிந்தனையின் வெளிப்பாடே பேச்சும் எழுத்தும்.

பேச்சுக்கும் எழுத்துக்கும் மொழியே மூலம்.

எனில், சிந்தனை என்பது மொழியால் வடிவம் பெறும் அறிவின் வெளிப்பாடு.

மொழியை மீறிய சிந்தனை—மௌனிகளுக்கோ ஞானிகளுக்கோ வாய்க்கலாமோ என்னவோ.

மனிதர்களுக்கு வாய்ப்பதில்லை என்பது உறுதி.

ஒரு இனத்தின் கலாச்சாரமும் பண்பாடும் மொழியால் வனையப்பட்ட நளினமிக்க நாகரிகக் கூறுகள்.

படிப்பகம்

www.padippakam.com



**தமிழ் எனக்கு ஊட்டுப் புறை**

நான் தமிழுக்குப் பிறந்தவன். எனக்குக் கொஞ்சம் ஆங்கிலமும் தெரியும். இந்த அன்னிய மொழி, என் கருத்து வெளிப்பாட்டுக்கான ஊடகம் மட்டுமே.

ஆனால், என் உமிழ் நீரில் ஊறிவரும் தமிழோ, எனக்கு ஊடகமாகிவரும் ஊட்டுப்புறை. வள்ளுவன் சொன்னானே: உண்ணும் உணவை விளைத்துத் தருவதோடு, தானே உணவாகவும் ஆகிறது மழை என்று— தாய்மொழி அப்படிப்பட்ட தூய மழை நீர்.

ஆனால், தமிழகத்தில் 'சிந்தனையாளர்கள்' என்றும், 'அறிவு ஜீவிகள்' என்றும், 'கல்விமான்கள்' என்றும் தமிழாலேயே மேன்மை தேடி வயிறு வளர்க்கும் ஒரு புத்திசாலிக் கூட்டம், தமிழை வெறும் ஊடகமாகவே, ஒரு கருவியாகவே கொள்கிறது; கொச்சைப் படுத்துகிறது. மேலும் அது தன் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும்கூட மொழியை மீறிய தளத்தில் நட்டுக்கொண்டு வேர்களைப் பாய்ச்ச முயல்கிறது.

எவன் தன் சொந்த மொழிக்கு உள்ளூர நன்றியுள்ளவனாயில்லாமல், வெறும் அனுமானத்திலேயே வேற்று மொழிக்கு விசுவாசமாயிருக்கிறானோ, அவனை 'மொழி அகதி' என்றல்லாமல் வேறென்ன சொல்லி அழைப்பது!

தமிழகத்தில் அப்படிப்பட்ட இருவகை மொழி அகதிகள் இருக்கின்றனர்.

**இயல்பான மொழி யுணர்வுக்குப் புறம்பான...**

இவர்களில் ஒரு பிரிவினர், வெகுகாலமாகப் பாமரர்களாய் இருந்து, கடந்த இரண்டொரு தலை முறைகளாக ஆங்கிலத்துக்கு அறிமுகமாகி,— அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பானாமே— அந்த ரகத்தை சேர்ந்த ஆங்கில மோகிகளாய்த் தங்களை அடையாளம் காட்டி மகிழ்ந்து கொள்ளும் தற்குறிக் கல்விமான்கள். இவர்கள் எதற்கெடுத்தாலும் ஆங்கில வழியிலேயே மேற்கோள் காட்டும் மூச்சுப் பயிற்சியாளர்கள். இவர்களின் வேர்கள் தமிழில்தான் என்பதை மௌடிகத்தால் மறந்தவர்கள். ஒரு சிறு அதிர்ச்சிகூட அவர்களை சொந்தச் சுரணைக்குக் கொண்டு வந்துவிடும்.

இன்னொரு பிரிவினர் இருக்கிறார்களே — இங்கே அதிகம் பேசப்படுகிறவர்கள் — அவர்கள், இந்த மண்ணில் மகவாய்ப் பிறந்து தொப்புள் கொடியை அறுத்துக் கட்டிய கையோடு சம்ஸ்கிருதத்தை (ஆங்கில சாகசத்துக்கும் ஒன்றும் குறைச்சலில்லை)— தங்கள் இடுப்புக் கயிறாகவும், சற்று விவ

படிப்பகம்

www.padippakam.com



**மேன்மை தேடும் சின்னம்**

ரம் வந்த பிறகு அதையே குறுக்குப் பாய்ச்சலாய் முப்புரி நூலாகவும் தரித்து இரு பிறப்பாளர்களாய்த் தங்களைப் பத்திரப்படுத்திக் கொள்கிற பிராமணர் கள்; பார்ப்பனர்கள். இவர்கள் ஆரியர் களல்லர். ஆரிய- அனாரியக் கலப்பில் தோன்றிய மூத்தவர்கள். அதனால்தானோ, நடைமுறை வாழ்க்கையில் இவர்கள் அனாரியர்களோடும் மனோ தர்மத் தில் ஆரியர்களாயும் வாழும் வித்தை கற்றவர்கள். இவர்களின் பாரித்த உடம்பில் பூணூல் எவ்வளவு சிறிய அம்சம்! அது போலத்தான் இவர்களின் அன்றாட வாழ்க்கையில் சம்ஸ்கிரு தத்தின் பங்கும். ஆனால் பூணூல் இவர்களை உயரே தூக்கிப் பிடிக்கும் சின்னமாதல் போலே, சம்ஸ்கிருதத்தையும் தங்கள் மேன்மைக்கான சின்னமாக நம்புகின்றனர்.

எனில், இவர்கள் தமிழில் சம்ஸ்கிருதத்தை சகட்டு மேனிக்குக் கலந்துவிடத் துடிக்கிறார்களே, அது ஏன்?

தமிழ் இவர்கள் தாய்மொழிதான். சந்தேகமே இல்லை. தமிழுக்கு இவர்கள் செய்திருப்பதும் ஒன்றும் குறைத்து மதிப் பிடக் கூடியதல்லதான்—சில கலாச்சாரப் பிறழ்வுகளும், அக் ரகாரத்தையே தமிழ் மண்ணின் மாண்பாகத் தூக்கிப் பிடிப் பதும் போன்ற குறைகளைத்தவிர. சொல்லப் போனால் இவை தெரியாமல் வரும் குறைகள் அல்ல. இவ்வாறெல்லாம் இவர் கள் திட்டமிட்டே செய்கிறார்கள் என்பதை விட இது அவர் கள் இரத்தத்தில் ஊறிப்போன குணம் என்பது சரியாகும்.

தமிழில் சம்ஸ்கிருதத்தைக் கலக்கும் சாகசமும் இவர்கள் இரத்தத்தில் ஊறிப்போனதுதான் கழுத்தறுப்பான விஷயம்.

தொன்மைக் காலத்தில், இம் மண்ணில் முதிர்ந்திருந்த தமிழ்- சம்ஸ்கிருதம் இரண்டிலும் மொழிக் கலப்பு என்பது இருவழிச் செயலாகவே நடந்திருக்கிறது. சம்ஸ்கிருதச் செம் மைக்கான பிரபஞ்சத் தெளிவில், விடுபட்டுப்போன கணுக் களையெல்லாம் தொன்மைத் தமிழ் நிரப்பியுள்ளது.

ஒரு கட்டத்தில் சம்ஸ்கிருதம் வேதமொழி, அல்லது தேவ மொழி என்று முத்திரை குத்தப்பட்டு பரணில் முடங்கும் சுவடிகளில் பதுக்கி வைக்கப்பட்டது. அதன் பின்னர்தான் தமிழில் சம்ஸ்கிருதக் கலப்பு என்பது ஒருவழிப் பாதையாய், இடைவிடாத ஓர் ஆக்ரமிப்பேபோல் செயல்படுத்தப்படுகிறது. இக் கலப்பை ஆரியர்கள் செய்யவில்லை. அருமைத் தமிழ் பிராமணர்கள்தான் செய்கின்றனர்.

இக் கலப்பைத் தொல்காப்பியரே ஒரு வரைமுறைக் குட் படுத்திய பின்னும், அதையும் மீறி, கிரந்த எழுத்துகளைத் துணை சேர்த்துக்கொண்டு மேலும் விரிந்தது.

படிப்பகம்

www.padippakam.com



**பிணங்கள் மிதக்கும் கங்கை வெள்ளம்**

தமிழின் செய்யுள் காலம் வரை ஒரு கட்டுக்குள்ளேயே இருந்த கலப்பு, உரை நடைக் காலம் தொடங்கிய போது முன்னெப்போதையும் விட காட்டாற்று வெள்ளம் போல சகட்டு மேனிக்காகி, மணிப் பிரவாள பாஷை உருவாகியது.

அந்தக் கலப்படத்தை இன்று வரை அனுமதித்திருந்தால் என்னாகியிருக்கும்?

சங்கத் தமிழ் நமக்குச் சம்பந்தமில்லாத மொழியாகியிருக்கும். தற்காலத் தமிழானது, பிணங்களும் பாடைகளும் பூக்குடலைகளோடு மிதக்கவிடப்பட்ட,— சாக்கடைகள் யாவும் துணை நதிகளாய் அங்கீகரிக்கப்பட்ட கங்கை வெள்ளமாய் ஒரு புதுப் பரிமாணம் பெற்றிருக்கும்.

நல்ல வேளை அது நடக்கவில்லை.

இந்தச் சம்ஸ்கிருத மோகிகள் தொல்காப்பியம் முதலாகச் சங்க இலக்கியங்களுக்கு உரையெழுதிய போது சம்ஸ்கிருத மேற்கோள்களும், ஆரிய மரபு சார்ந்த விளக்கங்களுமாக வலிந்து நிரப்பி, காலப் போக்கில் தமிழை ஒரு வழிமொழி தானோ என்று ஐயுறும் அளவுக்கு ஆக்கிரமிப்பை நடத்தியுள்ளனர்.

இதற்கும் மேலாக இன்னொன்றையும் செய்து வைத்தனர்:

இந்த நாட்டில் அறிவாளியாய் எவனும் பிறந்துவிடக் கூடாது. பிறந்துவிட்டால், அவனை உடனடியாகப் பிராமண சம்பந்தமுள்ளவனாக மாற்றிவிட்டுத்தான் மறுவேலை. ஆதாரபூர்வமாய் முடியாமற்போனாலும் கர்ண பரம்பரைக் கதையாகவேனும் கட்டிவிடுவார்கள். காரணம், பிராமண சம்மந்தமில்லாமல் எவனும் அறிவாளியாய் இருக்கமுடியாது என்றொரு பிறவி நம்பிக்கை அவர்களுக்கு.

**பொட்டு கட்டிகள்**

அறிவாளியாய் ஒரு வள்ளுவன் பிறந்தான். என்னவாக்கப் பட்டான்? பார்ப்பானுக்கும் பறைச்சிக்கும் பிறந்தவனாக சித்தரிக்கப் பட்டான். ஔவையும் அவன் சகோதரியாக்கப் பட்டாள்.

பழந் தமிழ்க் காப்பியக் குடியில் தொல்காப்பியன் பிறந்தான். எப்படி கணிக்கப்பட்டான்? ஜமதக்னியின் மகனாகவோ, பரசுராமனின் தம்பியாகவோ பார்க்கப்பட்டான்.

அதுபோலவே தமிழ் இன்னமும் புழக்கத்தில் இருப்பதற்கே, சம்ஸ்கிருதத்தின் பங்களிப்புதான் காரணம் என்று மனசுக்குள் இவர்களுக்கொரு குருட்டுக் கணக்கு.

படிப்பகம்

www.padippakam.com



பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே பேச்சு வழக்கழிந்து பரணேறிப் படுத்துக் கொண்ட ஒரு பாஷை(!), பல்லாயிரம் ஆண்டுகளாக இடையறாது புழக்கத்தில் உள்ள தமிழுக்கு இயக்க சக்தியாக இருக்க முடியும் எனில்,

ஏன் இவர்கள் அந்த சம்ஸ்கிருதத்தையே பேச்சு மொழி யாக்கிக் கொள்ளக் கூடாது? இதைச் செய்ய அவர்களை எது தடுக்கிறது? மீண்டும் பாமர நாவில் அந்த மொழியைப் பதியம் போட்டு வளர்த்துவிட்டால் 'இவர்கள் மறை மொழிக் குரியவர்கள்' என்னும் மேன்மை தேடும் முகத் திரை கிழிக் கப்பட்டு, வீழ்ந்துபட நேரும் என்பதா?

**தகர்க்க முடியாத மேன்மை**

எது எப்படியாயினும் பிராமணர்க ளின் மேன்மையை,— அவர்கள் எழுத் தோடு இடையறாத தொடர்புடையவர்க ளாக, வேறெதையும் விடக் கல்விக்கு முத லிடம் தருகிறவர்களாக, 'பிச்சை புகி னும் கற்கை நன்றே' என்பதை வாழ் வியல் நெறியாய்ப் பின்பற்றுகிறவர்களாக இருக்கும் வரை— தகர்த்துவிட முடியாது என்றே எனக்குப் படுகிறது.

பணம் பதவி, சொத்து சுகம் என்பன வெல்லாம் கல் விக்கு முன்னால் கடைசிப் பட்சம்தான்.

'ஒரு இனத்தை மேன்மைப்படுத்த வேண்டும் என்றால் அதற்குக் கல்வியைக் கொடு' என்பதற்கு நடமாடும் இலக்கி யம் அவர்கள்.

பிற சமூகக் குழுக்களில், குடும்பத்தில் ஒரு சரிவு வந்தால், முதலில் பலியாவது குழந்தைகளின் கல்விதான். படிப்பை ஏறக்கட்டிவிட்டு குழந்தைகளும் பாடுபட ஈடுபடுத்தப்படுவார் கள். ஆனால் பிராமணர்களில் எல்லா கஷ்டங்களும் கல்வி யைப் பெறத்தானே தவிர, விட அல்ல. அந்தக் குடும்பங்களில் பிறவி ஊமைகளும் பிறவிக் குருடுகளும் பிறக்கலாமே தவிர, கல்வி மறுக்கப் பட்டவர்களாய் யாரும் மரிப்பதில்லை.

பிராமணர்களோடு மல்லுக்கு நிற்க கச்சை கட்டும் மற் றவர்கள் இந்த ஒரே ஒரு அம்சத்தை மட்டும் பின் பற்றி னால், தங்கள் கச்சைகளை, சிகரங்களின் வணக்கங்களைப் பெறுவதற்காகத் தழைய விட்டுக் கொள்ளலாம்.

ஆனால், எதன் காரணமாக அவர்கள் முதன்மை பெறு கிறார்களோ, அதன் காரணமாகவே அவர்கள் மொழி அகதி களாக முரண் வேடம் புனைகிறார்கள்.

இதை என்ன வென்பது?

'நாகரிகமான காட்டுமிராண்டித்தனம்' என்கலாமா?

எழுத்துக்கும் இவர்களுக்குமுள்ள இடையறாத தொடர்பு

படிப்பகம்

www.padippakam.com



**தவிர்க்க முடியாத ஆதிக்கம்**

காரணமாக, இலக்கியத்திலும் பத்திரிகை துறையிலும் இவர்களுடைய ஆதிக்கம் தவிர்க்க முடியாததாகி விட்டது.

அரசாங்கத் துறைகளா என்ன, இட ஒதுக்கீட்டை அமல் படுத்துவதற்கு? அதனால்தான் வெளியார்களுக்கு அரசு பரிசளித்துவிட்டால் நூலை விமர்சிப்பதற்கும் மேலாக வக்கிரம் கொண்டு, 'இட ஒதுக்கீட்டுப் பரிசு' என்று நகைக்கிறார்கள்.

எனக்கு வெகு காலமாக ஒரு சந்தேகம்.

'இந்த இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையால் துப்புரவாளர் வேலைக்கான எங்கள் உரிமை கூடப் பறிக்கப்படுகிறது' என்று இவர்கள் சொல்வதே இல்லையே,— சம்பாதனைக்காக செருப்புக் கடைகளில் பிறன் பாதங்களைப் பற்றி, செருப்பில் நுழைத்து, அளவு பார்த்து கட்டித் தரும் வேலையைச் செய்தால் கூட?

அதுதான் அவர்கள் பண்பாடு.

இவர்களின் எழுத்தாதிக்கம் காரணமாக, தமிழை மணிப் பிரவாளமாக மாற்றும் அளவுக்கு இவர்களால் பாதிக்க முடிந்தது 'நலந்தானே!' என்பதை 'உபய குசலோபரி' என்று தானே ஆனந்தவிகடன் அக் காலத்தில் போட்டு மகிழ்ந்தது!

இப்படிப்பட்ட கலப்படம் ஒரு மொழியின் முகத்தைச் சிதைக்கிற காரியம் என்பது அவர்களுக்குத் தெரியாதா என்ன? செய்தார்கள்.

நல்லவேளை இந்த மொழிச் சிதைவு முற்றுப் பெறுவதற்குள், 50 ஆண்டுகளுக்கு முன்பாகவே திராவிட இயக்கம் தோன்றியது. இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் முதலில் மணிப் பிரவாளச் சாயலில்தான் பேசத் தொடங்கினார்கள் என்றாலும், இன்றைய தமிழுக்கு ஓர் எழுச்சி மிக்க புதிய பரிமாணத்தைக் கொடுத்தவர்கள் அவர்களே.

**புத்தொளி பெற்ற தமிழ்**

அதே கால கட்டத்தில் சம்ஸ்கிருதக் கலப்பை முற்றும் வெறுத்த தனித்தமிழ் இயக்கமும் தோன்றி, முழு வீச்சோடு குரல் கொடுக்கத் தொடங்கியதும், நடைமுறைத் தமிழில் ஒரு மாபெரும் புரட்சியே நிகழ்ந்து, தெளிவும் நம்பிக்கையும் பிறந்தன. பல நல்ல தமிழ்ச் சொற்கள் புழக்கத்திற்கு வந்தன. இனிய நீரோட்டம் போல தமிழ் மொழி நடை போடத் தொடங்கியது.

தமிழின் புது மலர்ச்சியாக, 'பாடசாலை' பள்ளியானதும், 'சர்வ கலாசாலை' பல்கலைக் கழகமானதும், 'ஸ்ரீ' திருவான

படிப்பகம்

www.padippakam.com



தும், 'நமஸ்காரம்' வணக்கமானதும்,— மாறிய வேகத்தில் மக்களிடையே நிலை கொண்டதும் மொழி வரலாற்றில் ஒரு மகத்தான மாற்றம்தான்.

முக்கியமாக, சங்கத்தமிழுக்கும், சமகாலத் தமிழுக்கும் இடையே உருவாகியிருந்த தீண்டாமை தகர்க்கப்பட்டது.

இனிமேல் அறிவியல் மொழியாக வளர வேண்டியதுதான்.

'வளர்ந்ததா? வளர்த்தார்களா?' என்றால் தயக்கத்தோடு 'இல்லை' என்றே சொல்ல வேண்டும்.

இதற்குச் சில காரணங்கள் இருந்தன.

தமிழையே புரட்சிகரமாய், புத்திளமையாய் மாற்றி விடுவதைப் போலப் புறப்பட்ட திராவிட இயக்கவாதிகள் 'தமிழ் வாழ்க' என்பதைத் தங்கள் அரசியல் ஆயுதமாக என்றைக்குப் பற்றினார்களோ, மந்திரிகளை மரியாதையோடு குறிக்கும் சொல்லான 'கனம்' என்பதை 'மாண்புமிகு' என்று மாற்றி அதையே நிரந்தரமாகத் தங்கள் பட்டப் பெயராக அணிந்து கொள்ள என்றைக்குச் சங்கல்பம் பூண்டார்களோ, அன்றோடு தமிழ் அவர்கள் ஆடுகளத்தில் உதைபடும் பந்தாயிற்று.

**கல்லறை வாசகம்**

அதற்கும் மேலாக, பொது வாழ்வின் மீறல்கள் யாவும் நியதிகளாய் அங்கீகரிக்கப்பட்டு, சமூக ஒழுக்க நெறிகளும், வாய்மையே வெல்லும் என்னும் நம்பிக்கையும் ஒரு சேரப் புதைக்கப்பட்டு, அந்தச் சமாதியின் மேல் நடுகல் வாசகமாக 'தமிழ் வாழ்க' நடப்பட்டது. இதைக் காக்கும் கவணெறி கல்லாக 'இந்தி ஒழிக'வும் கைகளில் ஏந்தப்பட்டது.

இந்த 'வாழ்க, ஒழிக'வுக்கு மேல் தமிழ் வளர்ப்பது பற்றிய நினைப்பே அவர்களுக்கு இல்லை.

திராவிட இயக்கவாதிகளால் விழிப்புற்று, வளர்ச்சி பெற்று, பின்னர் சுய சிந்தனை வளர்த்துச் செயல்படத் தொடங்கிய அறிவு ஜீவிகள், தங்கள் உந்து சக்தியில் வெறுமை கவிழ்ந்தாற் போல் திகைப்புக்குள்ளானாலும், புத்துயிர்ப்போடு சிலர் தங்கள் வேர்களை இம் மண்ணில் பாய்ச்சியவர்களாய், மொழி பற்றிய சிந்தனையை உட்கொண்டு, கலா பூர்வமான இலக்கிய வெளிப்பாட்டில் இறங்கியிருக்கிறார்கள் என்பது நம்பிக்கையான ஆறுதல்.

ஆனாலும், பத்திரிகைத் துறையிலும், அது வளர்க்கும் இலக்கியத் தளத்திலும் தமிழ் மீண்டும் ஒரு முறை வெட்ட வெளியில், மொழி அகதிகளின் நேரடிப் பார்வையில், நிராயுதபாணியாய் நிற்கிறது.

இவர்களால் தமிழும் அதன் கலாச்சாரமும் என்னாகும்?

படிப்பகம்

www.padippakam.com



**இந்திரா பார்த்தசாரதி யோசனை**

திரு இந்திரா பார்த்தசாரதி அவர்கள் ஒரு தமிழ்ப் பேராசிரியர்; பத்திரிகையாளர்; பிற தேசப் பரிச்சயம் பெற்றவர்; 'குறுதிப் புனல்' என்னும் நாவலின் ஆசிரியர்; நவீன நாடகவாதி.

அவர் ஒரு கருத்தை முன் வைக்கிறார்:

"எந்தக் காரணத்தை முன்னிட்டும் சங்க இலக்கியம், தொல்காப்பியம், திருக்குறள் போன்றவை தமிழனுக்கு மட்டும் சொந்தமானவை என்கிற ரீதியில் பிரச்சாரம் செய்வதை நிறுத்த வேண்டும். அவைகளை உலக இலக்கியமாகக் கொண்டு, கிளாசிகல் மொழியாக தமிழை அடையாளம் காட்டி லத்தீன், கிரேக்க இலக்கியங்கள் போல உலகப் பொதுச் சொத்தாக ஆக்குவதற்கு, தற்காலத் தமிழையும் சங்க காலத் தமிழையும் தனித் தனியாகப் பாகு படுத்த வேண்டும்."

இதுதான் அவர் கருத்து.

சங்கத் தமிழுக்கும் சமகாலத் தமிழுக்கும் உள்ள தொடர்பை முற்றாகத் துண்டிக்க வந்த மணிப்பிரவாளம் தமிழின் குரல்வளையை நெறித்தபோது, அதற்குத் தோதாகச் சொல்லப்பட்டிருக்க வேண்டிய யோசனையாயிருக்கலாம்.

**யோசனைக்கு ஒரு வடிவம்**

இந்த யோசனை செயல் படுத்தப் பட்டால், நடைமுறைத் தமிழுக்கான அகராதி எப்படி இருக்கும் என்பதனை 'க்ரியா' பதிப்பகத்தினர் வெளியிட்டிருக்கும் 'தற்காலத் தமிழ் அகராதி' வெகு 'ஜாஜ்வல்ய'மாகப் 'பிரத்யட்ச'ப் படுத்துகிறது!

இந்த அகராதிக்கு 'நிகழ்' (செப், '92) இதழில் வெளிவந்துள்ள மதிப்பீட்டிலிருந்து பதத்துக்காக ஒரு பத்தி இது:

"(இந்த அகராதியில்) ஐம்பெருங்காப்பியம் என்ற சொல் கிடையாது. ஆனால் ஐஸ்வர்யம் உள்ளது. திருக்குறள் இல்லை. திராபை இருக்கிறது. சிலப்பதிகாரம் இல்லை. சில்மிஷம் உண்டு. நாலடியார் இல்லை. நாணயஸ்தன் உண்டு. புறநானூறு இல்லை. புஸ்பவதி உண்டு. குண்டலகேசி இல்லை. குஷ்டரோகி உண்டு. சீவகசிந்தாமணி இல்லை. சீதோஷ்ணம் உண்டு. மணிமேகலை இல்லை. மனப்பிராந்தி உண்டு. கலிங்கத்துப் பரணி காணோம். கர்ப்பக்கிரகம் இருக்கிறது. பெயர்ச் சொற்களைச் சேர்ப்பது இல்லை என்றால், பைபிள், குர்ஆன் எப்படி சேர்க்கப்பட்டிருக்கிறது?"

—இந்த அகராதி பற்றி ஆயிரம் எழுதலாம்.

அந்த நோக்காடும்தான் இதை எழுதப் பண்ணியது.—

இது போன்ற யோசனைகளும், அவற்றை நடைமுறைப் படுத்தும் செயல்பாடுகளும் எத்தனை பிசிறில்லாமல் ஒருங்

படிப்பகம்

www.padippakam.com



கிணைக்கப்படுகின்றன பார்த்தீர்களா?

நீங்கள் பார்த்துக்கொண்டே யிருக்கும் குருடர்களாய் இல்லாமல் இருந்தால் சரிதான்.

திரு இந்திரா பார்த்தசாரதியின் யோசனைப்படி, சங்க இலக்கியங்கள் உலகப் பொதுச் சொத்தாக மாற்றப்படுவதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

அதற்காக, சங்கத் தமிழைக் காப்பிய மொழியாகப் பாடம் பண்ணி வைத்துவிட வேண்டும் என்பது எதற்கான வழி? ஷேக்ஸ்பியர், மில்டன், ஷெல்லி, பைரன், வோர்ட்ஸ்வொர்த் போன்றவர்களின் ஆங்கிலத்தை, தற்கால ஆங்கிலத்திலிருந்து பாகுபடுத்தி காப்பிய மொழியாக்குவது அவசியம் என்று எந்த ஆங்கிலேயனும் நினைக்கவில்லை. காரணம், பெரிதாய் வித்தியாசப் படவில்லை; அல்லது வித்தியாசங்கள் செரிக்கப்படுகின்றன என்பதுதான்.

இன்றைய தமிழ், சங்கத் தமிழிலிருந்து அடையாளமே தெரியாமல் வேறுபட்டுப் போய்விடவில்லை; அல்லது போக்கி விடவில்லை. சங்கத் தமிழும் தற்காலத் தமிழின் இயல்முறை வளர்ச்சிக்கோ, சீர்மைக்கோ குந்தகமாகவும் இல்லை.

பின் எதற்கு இந்தப் பாகுபாடு?

வலிந்து மேற்கொண்ட பிற மொழிக் கலப்பால் புறக்கணிக்கப்பட்டுள்ள, இன்றும் புழக்கத்திற் கேற்றதான பழந் தமிழ்ச் சொற்களையெல்லாம் தொகுத்தெடுத்து, இனங்காட்டி, துறைதோறும் வழக்கப்படுத்தி, தற்காலத் தமிழுக்குச் செழுமையூட்டுவதும் வலிமை கூட்டுவதுமல்லவா, இவரொத்த மொழி வல்லுநர்கள் ஆற்ற வேண்டிய மகத்தான பணி!

**மகத்தான வரலாறு மறக்குமா?**

பல நூற்றாண்டுகளாகவே, உலகின் எல்லாத் திசைகளிலிருந்தும் பல்லாயிரம் தாக்குதல்களுக்கும் சொல்லவொண்ணாத நெருக்குதல்களுக்கும் ஆட்பட்டு, ஆட்சியை இழந்து, பிறர் ஆளுகைக்கு உட்பட்டு, நிலம் சுருங்கி, பலம் குறைந்து, மாண்பிழந்து, குற்றேவல் புரிந்து, துயர் சுமந்து, நொந்து நைந்தாலும், — இந்தத் தமிழும் தமிழ் வளர்த்த கலாச்சாரமும் இந்தக் கணம்வரை அழியாமலும், அழிக்க முடியாமலும் அருகுபோல் வேரோடி வாழும் அதிசயம் இவர்களால் உணரப்பட வேண்டாமா!

இந்த உலகில் வரலாறும் வகைப்படுத்த முடியாத நீண்ட நெடுங்காலமாக மனித நாவில் தொடர் அறாமல் வழங்கி வரும் ஒரே மொழி தமிழ்தான் — தமிழ் ஒன்றுதான் — தமிழ் ஒன்று மட்டும்தான்.

இந்த மகத்தான வரலாறு முறியடிக்கப்படாமல் இருக்க

படிப்பகம்

www.padippakam.com



துணை நிற்பதும் மொழி வளர்ப்பதும் அல்லவா இவர்கள் பணியாய் இருக்க வேண்டும்?

இப்படிப்பட்ட மொழிக்கு மைந்தர்களாய்ப் பிறந்தமைக் குப் பெருமை கொள்ளாமல், சமஸ்கிருதம் பற்றி நினைக்கும் போதே "ஆஹா! என்ன ஆச்சர்யம் பார்த்தேளா! இன்னிய சயன்ஸைக் கூட துலாம்பரமா வர்ணிக்க ஸான்ஸ்க்ரிட்ல வார்த்தைகள் இருக்கு பார்த்தேளா! ரியலி அது தேவ பாஷைன்னா!' என்று மயிர்க் கூச்செறிந்து நிற்பது மொழி அகதித்தனம் அல்லவா!

தங்களை பிராமணர்கள் என்று அடையாளம் காட்டிக் கொள்ளக் கிடைக்கும் எந்தவொரு அற்ப சந்தர்ப்பத்தையும் கூடத் தவறவிடத் தயாராய் இல்லாத இவர்கள் தமிழர்களாய் இருப்பது சோற்றுக்கும் மாற்றுக்கும் கேடாய் அல்லதானே?

**சுஜாதாவின் கம்ப்யூட்டர் கணிப்பு**

திரு இந்திரா பார்த்தசாரதியின் யோசனை 'மிகவும் சிந்திக்க வைக்கிறது' என்கிறார் திரு சுஜாதா.

திரு சுஜாதா அவர்கள் தமிழ் எழுத்துலகில் தன் சாகச நடையால் ஒரு சகாப்தத்தையே உருவாக்கியவர். அறிவியல் கருத்துக்களைத் 'தாய்' மொழியில் எளிதாகப் புரிய வைக்கும் சிறந்த எழுத்தாளர் என்று பரிசு பெற்றவர். அறிவியல் தமிழுக்குக் கணிசமாகவே பங்காற்றியுள்ள விஞ்ஞானி.

இவர் பிறந்த திருவரங்கத்தின் வீதிகளில், ஆழ்வார்கள் போற்றி வளர்த்த, திருத்துழாய் மணக்கும் தூமொழியானது இன்றைக்கும் உலா வருகிறது; இனிக்க இனிக்க மதலையாடுறது. அந்த மதுரத் தமிழின் பிள்ளைப் பிராயத் தாலாட்டுன் இவரைப் புதிய வீச்சில் எழுதத் தூண்டியிருக்கலாமோ!

தமிழுக்கு இவர் செய்ததைவிட, தமிழ் இவருக்கு அதிகப் புகழை வாரி வழங்கியிருக்கிறது என்பதை மறக்க மாட்டார்.

எனினும், தமிழ் பற்றி இவருடைய கணிப்பென்ன?

'இன்னும் நூறு ஆண்டுகளில் தமிழ் இருக்காது' என்பது.

இவர் பங்களிப்பால் தமிழ் அப்படி 'பொசுக்' கென்று போய்விடாது என்று நம்பலாம்.

இப்படியொரு விட்டேற்றியான அபிப்பிராயம் சொல்ல முடிவதுதான் மொழி அகதித்தனம் என்று படுகிறது.

தமிழில் ஆயிரம் கலப்புகள் நேர்ந்திருக்கலாம். அப்படிக் கலப்பவை யாவும் பெயர்ச் சொற்களே. வினைச் சொற்களில் யாரும் கலப்படம் செய்யவில்லை.

நம் சுஜாதா அவர்கள் தமக்கே உரிய சாகச ஆளுமை

படிப்பகம்

www.padippakam.com



யோடும் வீரிய எகத்தாளத்தோடும் 'போனான்' என்பதை 'கோ (go) வினான்' என்றோ 'ஜா(இந்தி)வினான்' என்றோ எழுதத் தொடங்கி, இவருடைய சீட கோடிகளுக்கு சமிக்ஞை காட்டினால் ஒருவேளை இவர் கணித்த கால அளவில் தமிழுக்கு என்னவாவது ஆகலாம். அப்படியும் மரித்துவிடாது. காரணம் வினைச் சொல்லிலும் இவர் பகுதியைத்தான் மாற்றலாம். விகுதியை மாற்றினால் அந்தக் கணமே அது வேறு மொழியாகிவிடும். பிறகெப்படி தமிழைக் கொல்வது?

நகரியம் மீறிய மனித இயக்கமே இனி இல்லை என்பது போலவும், கலாச்சாரத் துவேஷமே இனி மனித வாழ்க்கையின் சாரம் என்பது போலவும் சுய சிதைவுக்காளானவர்கள் தான் இவ்வாறெல்லாம் கணிக்க முடியும்.

இன்னும் நாம் உண்ணும் பொருள்கள் மண்ணில்தான் விளைகின்றன. அந்த மண்ணைக் கிளறுகிறவனின் ஆன்மாவில் வேரோடி நிற்பதுதான் இந்தத் தமிழின் பலம்.

மற்றபடி சுஜாதா கணித்த கம்ப்யூட்டர், வைரஸ் தாக்குதலால் ஏற்கனவே முடமுற்று, இவரை முடக் கணிப்பாளராக இடக்கு பண்ணியிருக்கலாம் என்றே படுகிறது.

**தினமணி சுட்டும் தமிழ்த் திணிப்பு**

17-3-'93 ஆம் நாளிட்ட தினமணியில் 'தமிழ்த் திணிப்பு' என்னும் தலைப்பிட்டு ஒரு செய்தி. இந்தித் திணிப்பைக் கண்டித்து ஈரோட்டில் நடந்த கருத்தரங்கில் 'தனித் தமிழ்த் திணிப்பு' ஏற்படுத்தும் பிரச்சினையைத் தமிழ்க் குடிமகன் சொன்னாராம்.

"நேற்று கட்சித் தலைவர் மு. கருணாநிதி மதுரை வந்திருந்தார். அவர் மீண்டும் திரும்பும் போது அவரது வாகன ஓட்டுநரிடம் தலைவரின் நாட்குறிப்பை மறக்காமல் எடுத்து வைக்குமாறு கூறினேன். ஆனால் நான் தூய தமிழில் சொன்னது அவருக்குப் புரியவில்லை. இந்நிலை மாற வேண்டும்," என்றாராம் தமிழ்க் குடிமகன்.

'தனித் தமிழ்த் திணிப்பு ஏற்படுத்தும் பிரச்சினை' என்பது தினமணியின் வாசகம். டைரியை (Diary) நாட்குறிப்பு என்று குறிப்பிட்டது ஒரு பிரச்சினைக்குரிய தமிழ்த் திணிப்பாக தினமணியாளர்களுக்குப் படுகிறது. இதன் அர்த்தத்தில் அந்தத் தமிழர்களுக்கு வேண்டிய பிரச்சினை இல்லாத தமிழ் என்ன என்பதும் விளங்கத்தானே வேண்டும்.

'இந்தித் திணிப்பை' எதிர்க்கிறவர்களின் தமிழ்த் திணிப்பை இவர்கள் எதிர்க்கிறவர்கள் என்னும் பொருளில் ஒரு தலைப்பிட்டு, செய்தி தயாரிப்பது என்பது எவ்வளவு நேர்மையான 'ஜர்னலிசம்!'

படிப்பகம்

www.padippakam.com



**பாஷையின் மோகம்**

17-4-'93ஆம் நாளிட்ட தினமணி சுடரில் கொட்டை எழுத்தில் ஒரு தலைப்பு. 'பிற பாஷையிலுள்ள வார்த்தைகளைத் தமிழில் சேர்த்துக் கொள்ளலாம்' —பாரதி தாசன்: என்றொரு தலைப்பு.

1943 ஆம் ஆண்டு 'சக்தி' இதழில் வெளியாகியிருந்த ஒரு பேட்டியிலிருந்து எடுத்துப் போட்டிருக்கிறார்கள்.

அதில் ஒரு கேள்வி: பிற பாஷைகளிலுள்ள வார்த்தைகளைத் தேவையான அளவுக்குத் தமிழில் சேர்த்துக் கொள்ளலாமா? பாரதிதாசனின் பதில்: அவசியம் சேர்த்துக் கொள்ளலாம்.

1943இல் தமிழை மணிப்பிரவாளம் பீடித்திருந்த காலம்.

அப்போது 'பாஷை' மொழியாகவில்லை. 'சர்வகலா சாலை' பல்கலைக் கழகமாகவில்லை. ஆனால் 'அவஸ்யம்' அவசியம் ஆகிவிட்டது.

அந்தப் பேட்டியிலேயே பாரதிதாசன் பல்கலைக் கழகத்தை சர்வகலா சாலை என்றே குறிப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, மொழியையும் அவர் பாஷை என்றே குறிப்பிட்ட காலம்தான்.

ஆனால் இங்கே, 'பிற பாஷையிலுள்ள வார்த்தைகளைத் தமிழில்' என்னும் கேள்வியில் உள்ள பகுதியையே பாரதிதாசனின் வார்த்தைகளாக மேற்கோள் காட்டியிருக்கிறார்கள்.

1993 ஆம் ஆண்டில் அந்தப் 'பாஷை'யைப் பாரதிதாசன் மேல் ஏற்றிச் சொல்வது தவிர அவர்கள் நோக்கம் வேறென்ன?

'நோக்கம் ஒன்றுமில்லை; செய்திதான் முக்கியம்' எனில், "பிற மொழிச் சொற்களைத் தேவையான அளவு தமிழில் சேர்த்துக்கொள்ளலாம்" என்றே தலைப்பிட்டு, அதில் 'தேவையான அளவு' என்பதற்கு அழுத்தம் கொடுத்திருக்கலாம்.

சில்லறை விஷயங்கள்தாம். எத்தனை சாமர்த்தியமான 'ஜர்னலிச' நேர்த்தி!

**மாலனின் ஜன்னலூடே**

இவை போன்ற துணுக்குச் சுவைகள் யாவும் திரு மாலன் அவர்கள் செயல்முறை ஆசிரியராகப் பொறுப்பேற்றுக் கொண்டதும்தான் தினமணியில் காணக் கிடைக்கின்றன.

திரு மாலன் நல்ல பத்திரிகையாளர். 'இந்தியா டுடே'யில் கவனிப்புக்குரிய தமிழ் நடையைப் புகுத்தி சாதனை படைத்தவர். இப்போது தினமணியின் செயல்முறை (நிர்வாக) ஆசிரியரல்லவா! செய்வதும் செய்பவர்களைப் புகழ்வதும் அவருக்கு நிரம்பப் பிடிக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



கோட்சே கூட ஒரு செயல் வீரன் அல்லவா. அதனால், அவனையும் கூட மாலனுக்கு வெகுவாகவே பிடிக்கும். அவனைப் பற்றித் தன் 'ஜனகனமன' நாவலில் மாலன் தன்வாசகமாக இவ்வாறு சொல்கிறார்:

"கொலை செய்த கோட்சே ஓடுவதற்கு முயற்சிக்கவில்லை. உடனடியாகப் பிடிபட்டான். தேசப் பற்றின் உந்துதலால் காந்தியைச் சுட்டேன் எனக் காரணம் சொன்னான். தான் ஒருவன் மட்டுமே செய்தது இது எனக் கூட்டாளிகளைக் காப்பாற்ற முயற்சித்தான். அவனுடைய உணர்ச்சி மயமான வாக்குமூலம் ஒரு சுவாரஸ்யமான காவியம். தர்க்க ரீதியான வாதங்களும் புத்தி பூர்வமான விமர்சனமும் பொதிந்தது. அதை அரசாங்கம் முப்பது வருடங்களுக்குத் தடை செய்திருந்தது."

திரு மாலன் சற்று முயன்றிருந்தால் இவனைவிடத் தர்க்க ரீதியான வாதங்களும் புத்தி பூர்வமான விமர்சனமும் கொண்ட ஒரு மகா காவியத்தின் மகா புருஷனை ஹிட்லரில் கண்டெடுத் திருக்கலாமோ என்னவோ.

முன் சொன்ன பாரதிதாசன் பற்றிய செய்தியில் 1943 இலேயே 'அவஸ்யம்' அவசியமாகிவிட்டது என்று கண்டோம். அது பற்றி மேலும் ஒரு குறிப்பு.

**அவஸ்யமா பாலகுமாரன்?**

திரு பாலகுமாரனைத் தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். இன்றைய தமிழ் எழுத்துலகில் விற்பனை மன்னனாகத் தன்னை முன்னிறுத்திக் கொண்டுள்ள விவேகி. தான் எழுதி வரும் நூல்களின் எண்ணிக்கையை நூறாக்க முனைந்து கொண்டிருப்பவர். அவர் இப்போது தினமணியில் "உறவில் கலந்து, உணர்வில் நனைந்து" என்றொரு தொடர் எழுதுகிறார். அது தொடங்கும் முன் தினமணி இணைப்புகளில் அது பற்றிச் செய்த விளம்பரங்களில் அவர் எழுதிய வாசகங்களை எடுத்துப் போட்டுக் கொண்டே இருந்தார்கள்.

அதில் முதல் வாக்கியம் இது:

"உங்கள் திருமணம் பற்றி நீங்கள் அக்கறை கொள்ள வேண்டிய அவஸ்யம் உங்கள் சுகத்தின் பொருட்டல்ல." இதில் 1943இலேயே 'அவசியம்' என்று எழுதப் பழகிவிட்ட ஒன்றை 1993 இல் 'அவஸ்யம்' என்று எழுதிக் காட்ட நேர்ந்த அவசியம் உணரப்பட்டால் நல்லதுதானே. அதே உணர்வோடு அடுத்து வரும் 'சுகத்தின்' என்ற சொல்லையும் 'ஸுகத்தின்' என்று வார்த்தைப் படுத்தியிருக்கலாம். செய்யவில்லை. இது தான் அவருடைய விவேகம் என்பது.

படிப்பகம்

www.padippakam.com



இந்தியில் எழுதி, வாசிக்கிறவர்கள் ரஷ்யாவை 'ரூசி' என்றும், ஆங்கிலத்தை 'ஆங்கரேஜ்' என்றும் அவர்களின் மொழி மரபில்தான் சொல்கிறார்கள்.

நம் அறிவு ஜீவிகளுக்குத் தமிழில் மொழி மரபு என்று சொல்லும்படியான ஒரு மண்ணாங்கட்டியும் தேவைப் படுவதில்லை. இவர்களின் அறிவு ஜீவித்தனத்துக்கும் மேலாக ஒரு மரபா? மொழி பற்றிய மரபறிவு அவர்களைச் சிறுமைப் படுத்துகிற விஷயம் போலும்.

**வாஸந்தியின் பெண்ணியம்**

திருமதி வாஸந்தி ஒரு நல்ல எழுத்தாளர். எழுதுவதை ஆழ்ந்த ஈடுபாட்டோடு செய்பவர். 'இந்தியா டுடே' தமிழ் பதிப்பின் பொறுப்பாசிரியர். இன்று தமிழில் செலாவணியாகக்கூடிய பெண் எழுத்தாளர்களில், வெகு நயமாயும் கனமாயும் எழுதிக்கொண்டிருக்கிறவர். 80களில் படைப்புத் திறன் மிகுந்த எழுத்துகளைத் தந்தவர். இப்பொழுதும் தரக் கூடியவர்தான். சென்ற மாதத்தில்கூட 'கண்கட்டு' என்னும் பெயரில் அற்புதமாய் ஒரு கதை எழுதியிருந்தார்.

அவர் சில காலத்துக்கு முன் 'பொய் முகங்கள்' என்னும் பெயரில் ஒரு தொடர் எழுதினார். அது சொல்ல வந்த முக்கிய செய்தி என்ன தெரியுமா?

'புருஷர்கள், இனிமேல் தங்கள் பெண்டுகள் எவன் கூடப் படுத்துக் கொண்டாலும் சரி, பர புருஷனுக்கு பிள்ளை பெற்றுக் கொள்ளாமல், சொந்தப் புருஷனுக்கு மட்டுமே பெற்றுக் கொண்டால் போதும் என்பதோடு திருப்திப் பட்டுக் கொள்ள வேண்டும்' என்பதுதான்.

அக்ரஹாரக் கலாச்சாரம் என்பது மதாச்சாரம் பற்றியதுதான். மாசு ஆசாரம் பேசுவதல்ல. ஆயினும் கதையின் பாத்திரக் கட்டமைப்பும் சுயத்தைப் பற்றிக் கொள்ளத் துடிக்கும் உள்ளார்ந்த தேடலும் சகிப்புக் குள்ளாக்கின.

சமீபத்தில் தினமணி கதிரில் 'வேர்களைத்தேடி ...' என்றொரு தொடர் எழுதியிருந்தார். அதைப் படித்து முடித்த போது எனக்கொரு புராணக் கதை நினைவுக்கு வந்தது. யாரோ ஒரு பதிவிரதை தன் குஷ்டரோகப் புருஷனைக் கூடையில் வைத்துச் சுமந்துகொண்டு வேசி வீட்டுக்குப் போனாளாமே. இந்தக் கதையில் குஷ்டம் பிடித்த மனைவியை ஒரு கருணையுள்ள கணவன் கூடையில் வைத்துச் சுமந்து சென்று

படிப்பகம்

www.padippakam.com



நாற்சந்தியில் நின்று, அவளுக்குப் படுக்கைத் துணை தேடிப் பரிதவிப்பது போன்ற காட்சி வந்து குமட்டியது.

என்ன அற்புதமான இலக்கியம்! என்ன கலாச்சார வெளிப்பாடு! பெண்ணியத்திற்குச் செலுத்தப்படும் வீர வணக்கமோ! அப்படியொரு தடித்தனமான பாத்திரப் படைப்பர்!

அந்தத் தொடரில் பாபர் மசூதி இடிப்பை ஒரு சராசரி அக்ரஹார மாது இனிப்பு தின்று கொண்டாடுகிறாள் என்பது தான் சாரமான விஷயம். கல்வியால் மேன்மையுற்றதாக நான் கணக்குப் போட்டிருந்த இனம், மதாச்சாரம் என்னும் கர்வத்தால் கடை கெட்டுப் போகிறது என்பதைக் காட்டிக் கொடுத்த விஷயம்.

இது போன்ற இலக்கியங்கள் தமிழைச் செறிவூட்டத்தான் படைக்கப் படுகின்றன போலும்.

இவர்கள் நடக்கும் திசையையும் பிடிக்கும் கொடியையும் வெகு தெளிவாகவே வெளிப்படுத்துகிறார்கள்.

நமக்குத்தான் தீவிரம் புரியவில்லையோ என்று படுகிறது.

தமிழ் இவர்களுக்குப் பயன் படுகிறதா, தமிழுக்கு இவர்கள் பயன் படுகிறார்களா என்பதெல்லாம் அசட்டுத் தனமான ஆராய்ச்சிதானோ.

எழுத்து இவர்கள் எப்போதும் ஏந்தும் ஆயுதம் என்பதாலும், இலக்கியம் பற்றிய வெளியூரானின் விதிகளுக்கு இவர்களே தங்களைப் பாஷ்யக்காரர்களாக நியமித்துக் கொள்வதாலும், நிறையவே எழுதுகிறார்கள்; தங்கள் ஆசாரம் பற்றியே எழுதுகிறார்கள். அவற்றுள் தரமுள்ள படைப்புகளும் அமைகின்றன.

அத்துடன் பத்திரிகை முதலான எல்லாத் தகவல்-தொடர்பு சாதனங்களிலும் இவர்கள் மேலாதிக்கமே உள்ளதால், இவர்கள் சொன்னதுதான் இலக்கியம் என்றாகிறது.

இதை அங்கீகரிக்கவென்றே சில சாமியாடிகளையும் தங்கள் பக்கம் துணை வைத்துக் கொள்கிறார்கள்.

உண்மையில், இவர்கள் அங்கீகரித்ததை விட, கண்டு கொள்ளாத படைப்புகளும் படைப்பாளிகளுமே அதிகம்.

**வணங்கத் தக்கவர்கள்**

இது போன்ற ஐயுறவுகளுக் கெல்லாம் அப்பாற் பட்டவர்களாக, தங்கத் தமிழ் மைந்தர்களாக வாழ்ந்து, தமிழை சுவாசித்து மகிழ்ந்த தமிழ்த் தாத்தா, மகாகவி, சாஸ்திரியார், ஐயங்கார் போன்ற உத்தமர்கள் அநேகர்.

அவர்களுக்கென் வணக்கம்.

படிப்பகம்

www.padippakam.com

அம்சப்ரியா

## கண்ணாடி

எந்தக் கணங்களிலெல்லாம்
உன் முகமூடிகள் உனக்காகிறதென
என் மனதறியும்....
எந்தச் சமயங்களிலெல்லாம்
என் பொய்க்கால்களால்
என் பயணம் போகிறதென
உன் மனமறியும்...
அப்புறம்
உன்னை நானும் என்னை நீயும்
புழுதி வாரிக்கொள்ள,
முடிவாய் ஊரின் மத்தியில்
நம் நிறங்கள் அப்பட்டமாய்!

## முகமறிதல்

மனிதர் கூட்டத்தில்
தன் முகம் நிலை நிறுத்த,
மறுமுகம் அறிய
மனசு தடுக்கும்.
விருப்பமின்றித் திரும்பும்
முகங்களை அறியா முகங்கள்
முகங்களாய்க் காட்டிக் கொள்ள
பிரயத்தனப்படும்
வெகு சாமார்த்தியமாய்
வேசம் மறைத்து!

## செல்விக்கு...

எலும்புக் குருத்துகளை
துளைத் தேகும்
இந்தப் பெருங்குளிரில்
நனைகிற உனக்கு
என்னாலானது
மனதாலேனும் ஆறுதலாகிற
வார்த்தைப் போர்வை யளிப்பதே.
நீயோ
அருகிலிருக்கிற நெருப்பில்
தூரத்து தீக்கு வலுவில்
விருப்பமில்லா வேசத்தில்
விரும்பி சாம்பலாய்...!

படிப்பகம்

www.padippakam.com



## பள்ளம்

தோண்டிக் கிடந்த நீள் பள்ளத்தில்
சரிந்திறங்கியது உள் மண்.
அரூப வெளியில் மிதந்தது இருள்.
குழி காண ஏதும் சேகரம்கொள்ளல் நிஜம்
சிகரெட், ஃபில்டர்கள்,
அட்டைத் துண்டுகள், மட்கிய
இலைத்துகள்
கழிவு நீர் எல்லாமும்
கலத்த லென்கிற விஷயம் மிக
நேரிடையாய்.
ஐக்கியமென்பது இப்படி இருத்தல்.
யாருக்கோ அவசியம்—
சமமாயிருந்த சாலையோரம்
சேதாரமாதல்.
சமவெளியில் உலவ வந்தது
அகாத தளத்தில் கிடந்த மண்சுவர்.
என்றைக்கு நிரப்பப்படும்
என்ற அவதானிப்போடு அது
அத்வான வெளிகளை வெறித்தது.

**2**

பயங்கரக் காட்டிற்குள்ளிருந்து ஒலிக்கிறது
வேதனை மிகுந்த அழுகைக் குரல்.
கண்ணீரின் தகிப்பில் கலங்குகிறது காடு.
வேரோடு சாய்கின்றன மரங்கள்.
முட்டி மோதிச் சாகின்றன பறவைகள்.
அதி விரைவாய்ப் பாய்ந்து மறைகின்றன
மிருகங்கள்.
அரூபமாய் ஆகத் தொடங்குகிறது
காட்டின் ரூபம்.
எதையாவது பற்றிக் கொள்ள நீள்கிறது
அக் குரலின் கைகள்.

படிப்பகம்

www.padippakam.com

# புத்தக உலகம்

கே. ஜெகதீஷ்

என் வாழ்க்கையில் என் தாயைவிட நான் அதிகம் நேசித்தது என் புத்தகங்களை. சிறியதும் பெரியதுமாய் அவ்வப்போது என் பொருளாதார வசதியினாலும், பழைய புத்தகக் கடைக்காரர்களின் கரிசனத்தாலும், புத்தகக் கண்காட்சிகளாலும் நான் சேகரித்தவை அவை. எனது வாழ்க்கையின் ஒவ்வொரு அடியெடுப்பிலும் தீர்மானம் செய்யும் என் மனவோட்டத்தை, என் சிந்தனையை ஆக்ரமித்திருப்பவை என் புத்தகங்கள்.

வீடு மாற்றும் போது பௌதிக ரீதியான சுமையாகி விடுகின்றன இப்புத்தகங்கள். அதைப் போலவே வாழ்வின் முக்கியமான முடிவுகளில், திருப்புமுனைகளில் (என் உத்தியோகம், இல்லறம், பயணம் எதுவாயினும்) சுகச்சுமையாக அவை கனப்பதும் உண்டு. ஆனாலும் அது தாய் தன் குழந்தையை சுமப்பதுபோல ஒரு ஏழை தன் உணவைச் சுமந்து போவது போல சுகமான சுமைதான்.

என் மனிதம் விழிப்புப் பெற்றது புத்தகங்களால். என்னை மனிதனாக நான் உணரத் தொடங்கியது புத்தகங்களால். என் சகமனிதர்களை நேசிக்கக் கற்றுத் தந்தவை என் புத்தகங்கள். என்னை என்னிலிருந்து உரித்துப் போட்டு விளக்கம் கூறியவை என் புத்தகங்கள்.

வாசிக்கும் பழக்கம் எனக்கு எப்படி ஏற்பட்டது? எல்லா குழந்தைகளுக்கும் இருக்கும் கதை கேட்கிற ஆவல்தான் போலும். ஷேக்ஸ்பியரில் தொடங்கிய என் படிப்பார்வம் பின்னர் விடலைப் பருவத்தில் துப்பறியும் கதைகளில் திசை மாறியது. ஜனரஞ்சகப் பத்திரிகைகளின் தொடர் கதைகள் என்னை தவறான முறையில் கிண்டிக் கொண்டிருக்கையில், என்னை நிறுத்தி நிதானிக்கச் செய்த இலக்கியப் பரிச்சயம் ஏற்பட்டுவிட்டது.

அவ்வளவுதான். என் பழைய பாதையை நான் எங்கே தொலைத்தேன் என்று ஞாபகம் வரவில்லை. நான் நானாக இல்லை. என் சட்டைக்குள்ளேயே தொலைந்து போக இருந்த என்னை காலம் மீட்டுக் கொடுத்தது.

என்னை, என் சிந்தனைகளை ஆகர்ஷித்து என் உணர்வுகளையும் அறிவையும் கடிவாளங்களாக்கி ஓட்டிச் செல்லும் என் புத்தகங்கள்தான் என் முன்னோர்கள் விட்டுச் சென்ற உயில் எனக்கு. புதுமைப்பித்தன், கு.ப.ரா, செக்காவ், கிப்ரான், பாரதி, ஜே.கே., ரஜனிஷ் மாதிரி எத்தனை சொத்துக்கள் எனக்கு! அடடா! எந்த விதமான சட்டச் சிக்கலுமின்றி, தட்டிப்பறிக்கவோ பொறாமைப் படவோகூட யாருமற்ற, மிக ரகசியமாக

படிப்பகம்

www.padippakam.com



வும் மிகப் பகிரங்கமாகவும் நான் அடைந்துள்ள செல்வமல்லவா இது!

மின்சாரமில்லாத இரவுகளில் கொசுக்களை விட அதிகம் வேதனைப் படுத்தும் விஷயம் படிக்க இயலாமல் போவதுதான்.

நான் இந்தப் பூமியின் புதிய பாஷை ஒன்றைப் படிக்கிறேன். ஸ்தூலமற்ற, வடிவமற்ற, அகராதியற்ற, ஓசைகளற்ற, மௌன பாஷை இது. மனிதனுக்கும் மனிதனுக்குமாகப் பரவும் ஒளி இது. எனக்கும் என் ஆசிரியர்களுக்கும் நிகழும் ஆத்மார்த்தமான உரையாடல் இது. மதத்தின், இனத்தின், அரசியலின் துர்வாடை வீசாத சுகந்த வாசம் அது.

என் படிப்பு என் ரசனையாகவும், என் ரசனை என் அறிவாகவும், அறிவு ஞானமாகவும் முதிர்ந்து கனிகிற ஒரு இனிய வசந்தத்தை நான் இலை இலையாகக் கிளைத்து, பூப்பூவாய் மணந்து கொண்டிருக்கிறேன்.

'புத்தக உலகம்' என்கிறார்களே, புத்தகம் படிப்பவர்க்கு உலகமே அல்லவா மாறிப் போகிறது! புதிய அர்த்தங்கள் பிறந்து விடுகின்றன!

ஆனால் ஒன்று நிகழ்ந்திருக்கிறது......

எனக்கான வாழ்வு, என் உலகம் என்னிடமே உள்ளது. அது எந்த ஜாதியிடமும், கடவுளிடமும், அரசியல் கட்சியிடமும், தத்துவத்திடமும் இல்லை! என்னிடமே உள்ளது! என்னிடமே!

---

## வெட்டி வாழ்வு

அத்திவெட்டியான்

வாங்கிய கடன் தவறியதற்காய்,
கால்வலி பொறுக்காது
வேலைக்குப் போகாததற்காய்,
அவனோடு போகாதேயென
மகளைக் கண்டித்ததற்காய்

புளியமிளாறால் விளாசியவனை;
யுகம்யுகமாய் இருப்பது போன்று
இறுகிக் கிடந்த இருட்டை எரிக்க
முயன்று தோற்கும்
சிதைத்தீயின் முன் நின்று;
ஒரு சமையற்காரன்
கச்சிதமாகச் சமைப்பது போல்
எரித்துக் கொண்டிருந்தான்
மூன்று 'பொட்டி' சாராயம்
அவன் வாழ்வைக் குடித்திருக்க...!

படிப்பகம்

www.padippakam.com

**சரோஜினி நாயுடு**
தமிழில்:
**என். ஆர். தாசன்**

## இரவில்

தூங்குங்கள் குழந்தைகளே, தூங்குங்கள்.
விடிகிற வரை பத்திரமாகத் தூங்குங்கள்...
நாங்கள் விழித்திருந்து பார்த்துக்
கொண்டிருக்கிறோம்.

நீங்கள் தூங்குகிறபோது விதைத்தவை,
விழித்தெழுகிற நேரத்தில்,
அறுவடைக்குத் தயாராக இருக்கும்.

தூங்குங்கள் குழந்தைகளே, தூங்குங்கள்.
உங்களுக்குக் கிடைக்கப் போகும் 'நாளை'
பொன்னானது.

நீங்கள் தூங்கும்போது நாங்கள் விதைத்த
கனவுகளை,
அறுவடை செய்யப் போவது உங்கள் கைகளே.

எங்களின் நம்பிக்கையும் சோகமும் உங்களுக்கு
வலுவூட்டட்டும்.

எங்களின் கண்ணீர் உங்களை வளமைப்
படுத்தட்டும்.

## ஆசை

உங்களுக்கு பலம் ஊட்ட,
எனது இதயத்தைப் பிழிந்து மதுவாக்கி
என்னால் தர முடியுமா?

அன்பானவரே,
எனது பாடலிலிருந்து சுதந்திர வாளைத்
தங்களுக்கு வடித்துத் தர என்னால் முடியுமா?
தங்களின் அழிகிற சதையில்
அழியாத உயிர்மூச்சை உட் செலுத்தி,
ஜீவனை வெல்லவும்,
மரணத்தை மிதித்து நசுக்கவும்,
என்னால் முடியுமா?

தியாகத்தின் எத்தனையோ நட்சத்திர உயரங்கள்
காலடி படாமல் விடப்பட்டுள்ளன.

அதே போல் எனது உண்மையான காதலால்
தங்களைத் தெய்வமாக ஆக்குவது முடியாது
போகுமோ?

படிப்பகம்

www.padippakam.com

# அவன்

## முத்து வடுகு

மூச்சுக்காய் முகம் பிதுக்கி ஜன்னல் தேட வேண்டியிருந்த பேருந்து நெரிசலிலிருந்து இறங்கியபோது, உடலில் ஊர்ந்து கொண்டிருந்த வியர்வை மீது காற்றுப்பட்டதும் 'ஜில்'லென, ஏதோ பல உறுப்புகளை இழந்துவிட்டது போல இலேசாய் உணர்ந்தேன்.

திருமணத்திற்கு இன்னும் ஒரு மணி நேரம் இருக்கிறது. மெதுவாக நடந்தாலும் இருபத்தைந்து நிமிடங்கள் மிச்சமாகும். அதைவிட மெதுவாக, நடந்தால் வெயிலை சமாளிக்க வேண்டிவரும். இதற்கு, மிச்சமாகும் நேரம் தேவலையெனப் பட்டது.

நடக்கலானேன்.

ஹம்ஸா அண்ணன் வீட்டிற்குச் செல்வது இது இரண்டாவதுமுறை. முதல் முறை சென்றது கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு முன். அப்போது ஹம்சா அண்ணனையோ, அவரின் குடும்பத்தாரில் வேறு யாரையுமோ பார்க்கச் செல்லவில்லை. எனது நண்பர் ஒருவர் ஹம்ஸா அண்ணனின் முகவரி கொடுத்து, குறிப்பிட்ட தேதியில் தன்னை அங்கு சந்திக்கும்படி கூறியிருந்தார்.

அன்று அங்கு செல்லும்போது இருந்த கூச்சமோ, பயமோ இன்று இல்லை. வெறும் எதிர்பார்ப்பு மட்டுமே! அதுவும் அங்கு முதல் முதலில் சந்தித்த அந்த பதினெட்டு வயது சிறுவனின் மீதான எதிர்பார்ப்பே! அவன் என் நினைவிற்கு வருவதும், நினைவின் போது நான் அவன் மீதான பரிதாபத்தை சுமப்பதும் அடிக்கடி நிகழ்ந்திருக்கிறது.

★

அன்று முகவரியை கையில் வைத்துக் கொண்டு வெகுநேர அலைச்சலுக்குப்பின் வீட்டைக் கண்டுபிடித்துவிட்ட நிம்மதி ஒருபுறம் இருந்தாலும் 'எப்படி கூப்பிடுவது? யாரைக் கூப்பிடுவது?' என்ற தர்ம சங்கடத்தில் வாசலிலேயே நின்று கொண்டிருந்த போதுதான், ''யாரு'' என்று கரடுமுரடான குரலில் கேட்டபடி திடீரென அவன் எதிர்ப்பட்டான். பார்த்த உடனேயே அவன் மீது எனக்கு அருவறுப்பு ஏற்பட்டது பரிதாபம்தான். என்றாலும் எல்லோருக்குமே அவன் மீதான முதல் பார்வையில் முகச் சுளிப்பு ஏற்படத்தான் செய்யும்.

அழுக்குப் படிந்த, மஞ்சள் காவி பிடித்த, வலது புறத் தொடைப் பகுதியில் கிழிசல் தெரிய, முழங்காலுக்கு மேல் கட்டியிருந்த வேஷ்டியும், வேஷ்டியின் நிறத்தில் உதடுகளை இணைய விடாதபடி பிளந்து இருக்கும் நீண்ட மாட்டுப்பற்களும், கண்ணுக்குள் விழும் செம்பட்டை முடியும், கறுப்புக் கலரில் 'பட்டை' ஃபிரேம் போட்ட கண்ணாடியுமாக அவன் இருந்தான். காதுப் பகுதியில் துணி சுற்றியிருந்தான்.

அந்த சோடாப்புட்டி கண்ணாடி வழியே அவன் கண்களைப் பார்த்தால் அய்யனார் கோயில் பூதத்தின் கண்கள் மாதிரி பருத்துப்போய் விகாரமாகத் தெரியும். சட்டை போடாமல் மார்பில் உள்ள தழும்பை காட்டியபடி நிற்கும்

படிப்பகம்

www.padippakam.com



இவனிடம் போய் என்ன சொல்வது? இவனுக்கு என்ன தெரியும்? இவன் பைத்தியமாகவும் இருக்கலாம்.

என் மௌனத்தை மீண்டும் அந்த கரடுமுரடான குரலில் பிறாண்டினான் ''யாரு?'' என்று. இவன் போகமாட்டானோ எனத் தோன்றியது. முகத்தைச் சுளித்துக் கொண்டு, ''ஹம்ஸா...'' என்றேன். 'இல்ல' என்று சொல்லி சம்பந்தமின்றி 'க்கே.. க்க்க.. க்கே' என சிரிக்க, பற்கள் விஸ்வரூபம் எடுத்தன போல் தோன்றின. எனது தர்ம சங்கடமான நிலை கண்டு நானே பரிதாபப் படுவதற்குள் அந்த விஸ்வரூபத்தோடே அவன் உள்ளே ஓடினான். அடுத்த வினாடியே முற்றத்தைக் கடக்கும் போது, எதேச்சையாக என்னைக் கவனித்த ஒரு அழகான பெண், புன்னகையுடன் என்னை நோக்கி வந்து, மென்மையான குரலில் ''யாரு வேணும்?'' என்று கேட்க, 'ஹம்...ஸா...அண்ணன் வீ...டு' என்று நான் இழுக்க, ''உள்ளே வாங்க இந்த வீடுதான்,'' என்று, சிவப்பான அழகான முகத்தில் அளவான புன்னகையோடு உரிமையோடு அழைக்க, அவள் பின்னால் சந்தோஷத்தோடும், தயக்கத்தோடும் சென்றேன்.

அறிமுகம் இல்லாதவரை பார்க்கிற பார்வை அங்கு யாரிடமுமே தென்படவில்லை. இயல்பாக என்னை வரவேற்றனர். என்னை யாரும் அறிந்திருக்கவில்லை. ஆனால் என் அப்பா அனைவருக்கும் அறிந்தவராக இருந்தார். ஹம்ஸா அண்ணனும் எனது நண்பரும் வெளியில் சென்றிருப்பதாகவும் இன்னும் சிறிது நேரத்தில் வந்து விடுவதாகவும் சொன்னவர்கள் மீண்டும் அவரவர் வேலையில் பரபரப்பாயினர்.

பரபரப்பிற்கு மத்தியில் நான் அமைதியாக அமர்ந்தேன். அமர்ந்ததும் என் மனசும் கண்களும் அவனைத் தேட ஆரம்பித்துவிட்டன. 'இதற்குள் தானே ஓடிவந்தான்! எங்கு இருப்பான்? அவன் இருக்கும் இடத்திலும் இந்த அமைதி இருக்குமா! அது சரி, முதலில் இவன் யார்? ஹம்ஸா அண்ணனின் மகனா?'

இப்பொழுது அந்த அழகான பெண் என்னைக் கடந்து சென்றாள் இடுப்பில் தூக்கி செருகியிருந்த பாவாடையை இழுத்துவிட்டபடி. இருக்காது. இந்த அழகான பெண்ணுக்கு இவன் தம்பியாக இருக்கமுடியாது உண்மையில் இருக்கவும் கூடாது என்று, ஏனோ மனசு தவித்தது. அதற்குக் காரணம் எனக்குப் புரியவில்லை.

விசும்பல் சப்தம் கேட்டுத் திரும்பினேன். நான் இருந்த அறையின் ஓரப் பகுதியில், தொட்டிலுக்குள் குழந்தை நெளிந்து கொண்டிருந்தது. இது இவளின் அக்காவின் குழந்தையாக இருக்குமெனத் தோன்றியது. ஆணாகவும் இருக்கலாம் பெண்ணாகவும் இருக்கலாம். அதன் நெளிதலில், இடுப்புப் பகுதியில் ஈரம் இருப்பதை உணர்ந்தேன். விசும்பல் இன்னும் அதிகரித்தது. நான் சென்று தூக்கிக் கொஞ்சும் அளவிற்கு இன்னும் எனக்கு இயல்பான மனநிலை வந்தபாடில்லை. எனவே நெளியும் தொட்டிலைப் பார்த்தபடியே இருந்தேன்.

திடீரென என் பார்வை அதிரும்படி அவன் வந்து நின்றான். அருகில் இருந்த தூணைப் பிடித்தபடியே என்னைப்

படிப்பகம்

www.padippakam.com



பார்த்துச் சம்பந்தமில்லாமல் சிரித்தான். சிரிக்கும் போது அவனின் வாய் லெ- சான்ஸி சோப்பின் வடிவத்தைப் போல் இருந்தது. ஏதோ கலர் காகிதங்களைக் கிழித்து நகங்களில் ஒட்டியிருந்தான். அவை ஈரமாகவே இருந்தன. இவ்வளவு நேர இவனின் அமைதிக்குக் காரணம் புரிந்தது.

குழந்தையின் விசும்பல் அழுகையாக ஆரம்பிக்கையில், ஓடிப்போய் தொட்டிலுக்குள் தலையைவிட்டு 'டு.. டு...டுடு' என்று பைக் ஓட்டத் துவங்கி விட்டான். எனக்கு 'ச்சீ'... என்றிருந்தது.

இவன் முகத்தைக் குழந்தை நன்றாகப் பார்த்துவிட்டால் பயந்தல்லவா போகும்! இவன் தொட்டிலை இறுகப் பிடித்து குனிந்திருப்பதைப் பார்த்தால் இவனது முடியெல்லாம் குழந்தையின் முகத்தையே மூடிவிட்டிருக்கும் போல் இருந்தது. ஆனால் குழந்தை அழுகையை நிறுத்திவிட்டது.

இதற்குப் பெயர்தான் குழந்தையோ!

தலையை மெதுவாக வெளியே எடுத்து என்னைப் பார்த்துச் சிரித்தான். அழுகையை நிறுத்திவிட்டோம் என்று நினைத்துக் கொண்டோ அல்லது இவ்வளவு நேரம் தொட்டிலுக்குள் தலையை ஒளித்து வைத்து, தற்போது வெளிப்பட்டதாக நினைத்துக் கொண்டோ சிரித்திருக்கலாம். அவன் சிரிப்பிற்கு யாருக்குத்தான் அர்த்தம் தெரியும்!

''இந்தாங்க,'' என்றதும் திரும்பினேன். அந்த அழகான பெண் கையில் காப்பியுடன் நின்றாள்.

''அய்யய்யோ. இப்பத்தாங்க சாப்பிட்டு வந்தேன்.'' பொய்தான் சொன்னேன்.

''பரவாயில்லை. கொஞ்சம் தான். சாப்பிடுங்க.''

அசட்டுச் சிரிப்போடு வாங்கினேன். அவள் முகம் முழுதும் வியர்த்திருந்தது. எனக்குக் காப்பி போடும் போது ஏற்பட்ட வியர்வையாகத்தான் இருக்க வேண்டும். இவளின் பெயர் என்னவாக இருக்கும்? மனசு என்னிடமே கேட்டது. குடித்துக் கொண்டே தொட்டிலைப் பார்த்தேன். அவன் இல்லை. அடுப்படிக்கு ஓடியிருக்க வேண்டும். தொட்டிலுக்கு அடியில் இரண்டு நகக் கலர் காகிதத் துண்டுகள் கிடந்தன.

ஹம்ஸா அண்ணனின் மனைவி கையில் மாவோடு என்னைக் கடக்கும் போது, ''இவ்வளவு நேரம் என்ன டண்றாங்க...!'' என்று எனக்குக் கேட்கும்படி முணுமுணுத்துக் கொண்டே செல்ல, அடுத்த சில வினாடிகளிலேயே என் நண்பரும், ஹம்ஸா அண்ணனும் வந்துவிட்டனர். ஹம்ஸா அண்ணனுக்கு எனது வருகை அதிர்ச்சியான ஆனந்தமாக இருந்தது.

எனது நண்பர் என் இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டு, சந்தோஷமாக விசாரிப்புகளைத் தொடர ஆரம்பித்துவிட்டார். நாங்கள் பார்த்துக் கொண்டு கிட்டத்தட்ட ஐந்தாறு மாதங்கள் இருக்கும்! இடையே ஹம்ஸா அண்ணன், ''தம்பி, கைலி தரவா? கட்டிக்கிட்டு கொஞ்ச நேரம் படுத்து ரெஸ்ட் எடுங்க'' என்று கூற, புன்னகைத்த படியே, ''இல்ல இல்ல, பரவா யில்ல. சும்மா யிருக்கேன்,'' என்று நான் கூறிக் கொண்டிருக்கையிலேயே, தேங்காய்ச்சில்

படிப்பகம்

www.padippakam.com



யைத் தின்றபடியே அவன் என் கண்ணில் தென்பட, என் புன்னகை சிறிது சுருங்க ஆரம்பித்தது. தொடர்ந்து நான், எனது நண்பர், ஹம்ஸா அண்ணன் மூவரும் வரிசையாக சோபாவில் அமர்ந்தபடியே பேசினோம். திடீரென 'டம்' என்று குதித்து சோபாவின் ஒரு முனையில் அமர்ந்து தேங்காய் சக்கைகள் நிரம்பிய அந்த வாயைப் பிளந்து, 'க்கே...க்கே...க்கே' யென சப்தம் போட்டு அவன் சிரித்தான். ஹம்ஸா அண்ணனும் லேசாக சிரிக்க, நானும் செயற்கையாக சிரிக்க வேண்டியதாயிற்று. சிரித்துக் கொண்டே ஹம்ஸா அண்ணன் அவனுடைய தோள் மீது தன் கையைப் போட்டு, "தம்பி, இவருதான் என் செல்ல மருமகன். எப்பவுமே இங்கதான் இருப்பாரு. அவுக வீட்டுக்குப் போக மாட்டாரு. என் மக பாத்திமாவைத்தான் இவரு கல்யாணம் பண்ணிக்கிடுவாராம். என்ன மருமகனே..!" என்று என்னிடம் சொல்லிக்கொண்டே அவனிடம் கேட்க, சந்தோஷத்தில் எழுந்து 'க்கே க்கே' சிரிப்போடு ஓடிப்போய் வேலை செய்து கொண்டிருந்த பாத்திமாவை ஒரு முறை எட்டிப் பார்த்துவிட்டு அதே சிரிப்போடு மீண்டும், குதித்து வந்து சோபாவில் அமர்ந்தான்.

'பாத்திமா!'

மனசுக்குள் ஒரு முறை சொல்லிக் கொண்டேன் அந்த அழகான பெண்ணின் பெயர் தான் என்பதை உணர்ந்து கொண்டேன்.

மீண்டும் ஹம்ஸா அண்ணன், "அந்தப் பக்கத்து வீடு தான். எந்திரிச்சதும் நேரா இங்க வந்து பாத்திமா மூஞ்சில தான் முழிப்பாரு." என்று கிண்டலாக அவனைப் பார்த்தபடி சொன்ன போதே பாத்திமா வாளியை எடுத்துக் கொண்டு வெளியில் செல்ல எங்களைக் கடக்கும் போது அவன் குனிந்து என்னை எட்டிப் பார்த்து அவள் பக்கமாகக் கையை நீட்டி "பாத்திமா..." என்று லெ-சான்ஸி சிரிப்போடு மெதுவாக சொன்னான். அவன் முகத்திலும் எதிர்பார்ப்பு, ஆசை, உண்மையான சந்தோஷம் தென்பட்ட போது என் மனசுக்குள் ஏதோ நொறுங்கியது. மனசு கனத்தது.

அவனுடைய மனசுக்குள்ளும் ஏதோ ஒன்று வாழ்க்கை சம்பந்தமாக இருக்கத்தானே செய்கிறது! அவன் மீது பாவமாக இருந்தது எனக்கு. மனசுக்குள் நொறுங்கியதில் அவன் மீது இருந்த அருவெறுப்பு, கோபம், எல்லாமே மறைந்து விட்டன இப்பொழுது அவன் மீதான அனுதாபத்தைப் பூர்ணமாக மனசு சேகரித்துக் கொண்டிருந்தது. சற்று நேரத்திற்கு முன் அவனைப் பார்த்ததற்கும், தற்போது நான் அவனைப் பார்ப்பதற்கும் எவ்வளவோ வித்தியாசம் பரிணாம வளர்ச்சியடைந்து விட்டதாக! இந்தப் பரிணாம வளர்ச்சி அவனுக்கா, என் கண்ணுக்கா என்று தெரியவில்லை.

அவனிடம் மாற்றம் இல்லை. என்னிடம்தான், என் மனசிடம்தான் மாற்றம். அவன் பைத்தியமில்லை; கிறுக்கனுமில்லை. உணர்சிகள் உள்ள முழுமையான மனிதன். குழந்தைப் பருவத்தை நிலை நிறுத்திக் கொண்டே வளர்ந்துவிட்ட மீசை அரும்பிய குழந்தை. அவ்வளவுதான்.

சாப்பாடு தயாராகிவிட்

படிப்பகம்

www.padippakam.com



டது. மூன்று இலைகள் மட்டும் போடப்பட்டு இருந்தன. எனது நண்பரும், ஹம்ஸா அண்ணனும் உட்கார நானும் விரிக்கப் பட்டிருந்த இலைக்கு முன் அமர்ந்து நின்றுகொண்டிருந்த அவன் மீது என் மனசை விரித்துப் போட்டேன்.

''நீனும் உக்கார்டா,'' என்று அவனைப் பார்த்து ஹம்ஸா அண்ணன் சொல்ல, ''பாத்திமா''- என்று அவன் அசடு வழிய, நான் நொறுங்கிப் போனேன். சில விநாடிகள் அவனை உற்றுப் பார்த்தபடியிருந்தேன்.

இல்லை. இது தவறு. இவர்கள் இப்படி நடந்து கொள்ளக் கூடாது. அவன் மனதில் இது சம்பந்தமான ஆசையையும், கனவையும் தூண்டிவிடுவது முற்றிலும் தவறானது. பின்னால் இந்தக் குழந்தை மனுஷன் பாதிக்கப் படுவான் என்பதை தற்போது உணராமல் செய்து கொண்டிருக்கிறார்கள். அவன் மனசிடம் இவர்கள் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். விளையாட, விளையாட, அந்த இடத்தில் வேறு வளர்ச்சியேதுமில்லாமல் விளையாட்டுத் தடம் மட்டுமே பதிவாகி விடக்கூடும், நடைபாதை போல. இதை அவன் உணர்வது என்பது அசாத்தியமானதே! அவனுக்குத் தெரியாது 'நாம் என்ன செய்கிறோம், எதைச் செய்கிறோம், எப்படிச் செய்கிறோம்' என்பது அவன் குழந்தை மனுஷன்! ஆனாலும், அவனுக்குள் ஏதோ ஒன்று, பெண்மை பற்றிஅவனளவில் ஏதோ ஒன்று இருக்கத்தான் செய்கிறது.

நான் மௌனமாக சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். அவனும் எங்களோடு சந்தோஷமாகச் சாப்பிட்டான். அதன் பிறகு அவன் போவதையும், வருவதையும், பேசுவதையும் முகம் சுளிக்காமல் கவனித்துக் கொண்டேயிருந்தேன், அழகான பாத்திமாவைப் பார்த்தது போல.

பிறகு, நான் அவர்களிடம் விடை பெற்று வெளியேறுகையில், அவனிடம் அவன் பெயரைக் கேட்க நினைத்துத் திரும்பினேன். அவன் தொட்டிலுக்குள் தலையைக் கொடுத்தபடி இருந்ததால் நான் ஒன்றும் தோன்றாமல் வந்து விட்டேன்.

★

இப்பொழுது பாத்திமாவின் திருமணத்திற்குத்தான் சென்று கொண்டிருக்கிறேன் அவன் மீதான எதிர்பார்ப்போடு. வீட்டை நெருங்கியதும் என் மனசு படபடத்தது. பாட்டுச் சத்தத்திற்கு மத்தியில் வீட்டிற்குள் நுழைய பயங்கர கூட்டம். எல்லாம் சந்தோஷக் கூட்டம். பெண்ணும், மாப்பிள்ளையும் திருமணத்திற்குத் தயாராகிவிட்டிருந்தனர்.

நான் கூட்டம் முழுதும் தேடினேன். அவனைக் காணவில்லை. அவன் வரவில்லையோ! அதெப்படி வராமல் இருப்பான்! ஒரு வேளை இந்த ஒரு வருடத்திற்குள் அந்தக் குழந்தை மனுஷன் முடிந்து போயிருப்பானோ!

மனசு மேலும் படபடத்தது. தேடுவது தீவிரமானது. வீட்டிற்கு வெளியிலும் தேடத் துவங்கினேன்.

திடீரென மகிழ்ச்சி என்னை முழுவதுமாக அட்பிக் கொண்டது. அவன் நின்று கொண்டிருந்தான், ஒலி பெருக்

படிப்பகம்

www.padippakam.com



கியை இயக்கிக் கொண்டிருக்கும் இடத்தில் அதை வேடிக்கை பார்த்தபடி. அவன் அழகாகச் சீவியிருந்தது அசிங்கமாகத் தெரிந்தது. இடையில் ஒலி பெருக்கிக்காரர் எதையோ சொல்ல 'க்கே...க்கே..க்கே' என்று வாய் விட்டுச் சிரித்தபடியே கொஞ்சம் தள்ளி நின்ற என்னை பார்த்தான். அவனுக்கு என்னை நினைவில்லை; மறந்து விட்டிருந்தான்.

திருமணம் முடிந்து விட்டது. எனக்கு யாரிடமும் எதுவும் பேசத் தோன்றவில்லை. அவனிடம் செல்லவும், பேசவும் மட்டுமே தோன்றியது. அருகில் சென்றதும் என்னைப் பார்த்துவிட்டு மீண்டும் வேடிக்கையில் கவனத்தைச் செலுத்தினான்.

என்ன பேசுவது? எது பற்றி பேசுவது? எப்படி பேச்சை ஆரம்பிப்பது? எனக்குக் குழப்பமாக இருந்தது என்பதைவிட அந்த அளவிற்கு அவன் குழப்பமானவனாக இருந்தான் என்பதே உண்மை. அவனை மெதுவாக வருடினேன். திரும்பினான்.

''சாப்டப் போலாமா?''

நான் கேட்டதும் சிரித்தான். இன்னும் அதே லெசான்ஸி சிரிப்புதான்! என்னைத் தொடர்ந்து நடக்கலானான். கூட்டத்தின் நெரிசலுக்குள், பெரிய அதிகாரியை அழைத்துச் செல்வது போல், பதட்டம் கலந்த பொறுப்போடு அழைத்துச் சென்று சாப்பிட அமரச் செய்தேன்.

சந்தோஷமாகவும், வேகமாகவும் சாப்பிட்டான் அவன்.

---

## 'என் மதம்- ஒரு மறு பரிசீலனை'

கட்டுரைக்கான தம் அபிப்பிராயமாக திரு ம.ந. ராமசாமி இவ்வாறு சொல்கிறார்: ''காஷ்மீரில் இந்துக்களின் கோயில்கள் இடிக்கப்பட்டிருக்கின்றன. இதை எதிர்த்து எந்த ஒரு இஸ்லாமியத் தலைவரோ, இயக்கமோ குரல் கொடுக்கவில்லை. மதச் சார்பின்மையாளர்களும் ஏதும் சொல்லவில்லை. ஒரு மசூதி இடிபடும்போது எழும் கூக்குரலில்தான், அரசியல் இந்த நாட்டில் எந்த அளவுக்கு அசிங்கமான வகையில் செயல்படுகிறது என்பதை புரிந்து கொள்கிறோம்.

—நியாயமான கோபம்தான், உண்மையாகும் பட்சத்தில்.—

29-2-'93 தினமணி கதிர்- 'தமிழன் பதில்கள்' தந்த பதிலிது:

''இடிக்கப்பட்டது எத்தனை கோவில், எந்த வருடம் என்று கேட்டபோது, எண்ணிக்கை நிச்சயமாய்த் தெரியாது என்று பதில் வந்தது. இருந்தாலும் பா.ஜ.க. கொடுத்த பட்டியலை எடுத்துக்கொண்டு காஷ்மீருக்குப் போனார் ஒரு இளம் பெண். பேவஜா என்ற பத்திரிகையாளர். என்ன ஆச்சர்யம்! இடிக்கப்பட்டதாகச் சொன்ன 23 கோவில்களில் 21 கோவில்கள் எவ்வித சேதமுமின்றி கல்லு குண்டாக இருந்தன. இரண்டு, தீவிரவாதிகளுக்கும் பாதுகாப்புப் படைக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில், 90-ம் வருடமே, சேதமடைந்தன என்று அந்தக் கோவில் பூசாரிகளே சொல்லுகிறார்கள்.''

படிப்பகம்

www.padippakam.com

**பரிமளமுத்து**

## அபாய எச்சரிக்கை

மானிடமே
நீ யுகத்தின் குழந்தை!
உயிரினங்களில் சற்று
வித்தியாசமான உயிரினம்!

எல்லைகளற்ற பரந்த பூமியில்
எல்லைகள் வகுத்து
சுய நலத் தவற்றைத் தொடங்கி வைத்தாய்!
வெல்ல இயலாதவற்றைத்
தொழக் கற்றுக்கொண்டாய்!

உன் பயங்களால்
பஞ்ச பூதங்களைக் கடவுளாக்கி
கற்பனை உருவங்கள் படைத்தாய்!
நாம் என்ற உணர்வைக் கொன்று
நான் என்றாகித் தவற்றை தொடர்ந்தாய்!

பேராசையும், கர்வமும்,
அதீத கற்பனை வளமும்,
பொய்மையும், பகையும்,
மதங்களை உருவாக்கின.

எந்தவொரு தீய சக்தியும்
உருவாக்கியவர்களையே
அழிக்கும் என்பது உலக நியதி.
உனக்கு மட்டும் விதிவிலக்கா என்ன?
நீ உருவாக்கிய மதம்
உன்னை அழைத்துச் செல்வது
வாழ்க்கையையும் நிம்மதியையும்
தேடியல்ல.... அழிவைத் தேடி.....
ஆம்..... அழிவைத் தேடித்தான்.

படிப்பகம்

www.padippakam.com

**கோபிகா**

## ஜீவ சங்கமம்

புறவாசியாய் இருந்த நான்
அகவாசியாய்
குடியமர ஆயத்தமாகிறேன்.

புலன் நெடுகிலும்
முகவரி விசாரித்து
மங்கலாய்த் தெரிந்த
ஜோதி முகாமுக்குள்
பிரவேசமாகிறேன்.

மென்மையாய்
மீட்டி வந்த
சாந்த சுருதியில் லயிக்க
பிஞ்சாய்ப் பிரசன்னமான
சூரிய விரல்களால்
மெல்லக் கிடத்தி முயங்கிட
கர்ப்பந் தரித்தேன்.
ஜீவன் கடித்துவிட்ட
பற்குறிகளால்
நாணிச் சிவந்து
ஞானப்புரத்தில் ஒதுங்கினேன்.

தன்னைத் தானே
ஈன்றெடுத்துக் கொண்ட
மலர்ச்சியில் மிதந்து
மீண்டும் திரும்புகிறேன்.

அபிலாஷைகள் பூசி
ஆரவாரமாய் அழைக்கும்
இந்த
அரங்கை நோக்கி.

படிப்பகம்

www.padippakam.com



# ஒருபொருட் பன்மொழி ஹைகூ

நெல்லை சு. முத்து

ஹைகூவில் பூக்களும் பிறை நிலாவும் வசந்த காலக் குறியீடுகள். விசிறி, வண்ணத்துப் பூச்சிகள் கோடை அறிவிப்புகள். மழை, காளான்கள் கார் கால அடையாளங்கள். சில் வண்டுகள், காவல் பொம்மைகள் இலையுதிர் கால அறிகுறிகள்.

தமிழிலும் நிலாப் பொழிவையும், பட்டாம் பூச்சிகளின் படபடப்பையும் கண்டு ரசிக்காத ஹைகூ கவிஞர்களே இல்லை எனலாம். அவ்வாறே மழை, காளான், காவல் பொம்மை, சூரியன், பனித்துளி ஹைகூக்களும் தமிழில் ஏராளம்.

## மழை விழும் பாக்கள்

*பருவ மழையின்*
*புழையொலி கேட்பீர்*
*இங்கென் கிழச் செவிகளே.*

—பாரதி அன்று மொழி பெயர்த்துக் காட்டிய பூஸோன் யோ ஸாஹா எனும் ஜப்பானியக் கவிராயரின் 'ஹொக்கு' (ஏழிசைப் பாட்டு) தொட்டு இன்றுவரை தமிழ் ஹைகூக்களில் பல மழையில் நனைந்து குளிர்ந்துள்ளன.

*புள்ளி வைத்தேன் நான்*
*கோலமிடுவதற்கு*
*வந்தது மழை.*

(இன்னும் மக்கள்)

என்று சென்னை பால. பாண்டியன் பாடியதற்கும்,

*வாசலில் வண்ணக் கோலம்*
*வானில்*
*தயாராய் மழை*

(தமிழ்மணி, தினமணி சுடர், 3-8-1991)

என்கிற மீனாதாஸ் ஹைகூவிற்கும் இடைவெளியே இல்லை.

அவ்வாறே மழைக்காட்சிகள் தமிழ் ஹைகூ கவிஞர்களைப் பாதித்த அளவுக்கு வித்தியாசமான பதிவுக்குள்ளாகவில்லை எனத் தோன்றுகிறது.

*யார் அடித்துக் கறுத்தது*
*வானத்தின் கன்னம் அழுகிறது*
*மழைத் துளிகளாய்* [பார்

-இலையுதிர்காலம்நிரந்தரமல்ல விடுகதை பாணியில் அமைந்த பரிமளமுத்துவின் இந்த ஹைகூ பழைமையான படிமந்தன் வெளிப்பாடாகிவிட்டது.

*கொடியெல்லாம் முத்துக்கள்*
*இப்போதுதான்*
*மழை பெய்தது.*

(புள்ளிப்பூக்கள்)

*ஆற்று நீரில் முத்து அள்ளிப்*
*போடுவது யார்?*
*ஓ மழை* (தீவின் தாகம்)

என் பனவெல்லாம் வியப்பு மேலீட்டுப் படிம ஹைகூக்கள். ஏற்கனவே "மழைபாடுகின்றது அது பல கோடி தந்திகளுடைய தோர் இசைக்கருவி. வானத்திலிருந்து அமுத வயிரக் கால்

www.padippakam.com



கள் விழுகின்றன. பூமிப்பெண் விடாய் தீர்க்கிறாள்; குளிர்ச்சி பெறுகின்றாள்'' என்று பாரதி அதிசயித்துக் கூறும் வசன கவிதையின் வரிகளுள் இன்றைய ஹைகூ அடக்கம்.

நட்சத்திரங்களின் கண்ணாடித்
தடாகம்
திடீரெனக் கோடைத் தூறல்
நீரில் கன்னக் குழிப்புகள்
(ஜப்பானிய ஹைகூ)

சென் துறவி பேஸாரவின் ஹைகூவில் வரும் இந்தத் திடீர் மழை தமிழில் மித்ராவிடமும் இயல்பாகவே வந்துவிட்டது.

திடீரென மழை
குளம் நெடுக
வியப்புக் குறிகள்
(ஹைகூ கவிதைகள்)

அன்றியும் இந்தக் குளத்தில் மழை கவிஞர் அறிவுமதியுடைய ஒரு ஹைகூவைப் பிரதிபலிக்கிறது.

ஊசி குத்தி
கொப்புளங்கள்
குளத்தில் மழை
(புல்லின் நுனியில் பனித்துளி)

## காளான் பாக்கள்

காளான்களின் 'குடை' தோற்றத்தில் முதிர்ந்த ஹைகூக்கள் சில:

யாருக்கிந்த குடை?
வெயிலில் ஊறும் எறும்புக்கா?
வெள்ளையாய் காளான்
(காற்றின கைகள்)

அட நாய்க்குடையின்
நன்றியைப் பார்த்தீர்களா?
குடை பிடிக்கிறது மண்ணுக்கு
(தீயின் தாகம்)

மழை ஓய்ந்த காலைப் பொழுது
பசும் புற்களுக்குக்
குடை பிடித்தன காளான்கள்
(சுபமங்களா மார்ச் 1992)

## காவல் பொம்மை ஹைகூக்கள்

வண்ணத்துப் பூச்சி, நிலாவுக்கு அடுத்தபடியாக கவிஞர்களைக் கவர்ந்தது சோளக் கொள்ளை, வயற் காட்டுக் காவல் பொம்மைகள் அல்லது திருஷ்டிப் பொம்மைகள்.

மல்லிகைத் தோட்டம்
விகாரமாய்ச் சிரிக்கும்
காவல் பொம்மை
(புல்லின் நுனியில் பனித்துளி)

கையில் கம்பிருந்தும்
திருடனைப் பார்த்து
சிரிக்குது திருஷ்டி பொம்மை
(இன்னும் மக்கள்)

பருத்திக் கொல்லை
காவல் பொம்மைக்குக்
கந்தல் சட்டை
(புல்லின் நுனியில் பனித்துளி)

ஆடை உடுத்தியும்
நிர்வாணம்
திருஷ்டி பொம்மை
(இன்னும் மக்கள்)

சோளக் கொல்லைப்
பொம்மைக்கும்
உடையுண்டு...
எங்களுக்கு (தீயின் தாகம்)

இனி, காவல் பொம்மையும் பறவையின் திருட்டு விளையாட்டையும் ரசிக்கலாம்.

முட்டாள் வயற்காட்டுப்
பொம்மையே
உன் குச்சிக் காலடியிலேயே
கதிரைத் திருடும் பறவைகள்

- தாயூ எழுதிய ஜப்பானிய ஹைகூ அருமையான நகைச்சுவை.

வெள்ளைச் சோளக் காட்டில்
காவல் காக்கும்—என்னைக்
கொத்திப்போன குருவி
(சூரியப் பிறைகள்)

—தமிழன்பன் ஹைகூ இது. அவ்வாறே காவல் பொம்மை

www.padippakam.com



யின் தொப்பி, தலை இடம் பெறும் ஹைகூக்கள்:

அரசனுக்குக் கூட
தொப்பி எடுத்து தலை
வணங்குவதில்லை.
வயற்காட்டு பொம்மை

டான்சூய் காட்டும் இன்னொரு விறைப்பான ஹைகூ.

''சோளக் காட்டுப்
பொம்மைக்கும்
கோபம்—குருவி
குல்லாயில் முத்தமிட்ட போது''
(சூரியப்பிறைகள்)

''காட்டுப் பொம்மையின்
தலையில்
அமர்ந்து எச்சமிட்டன
பேதமறிந்த காக்கைகள்''
(நட்சத்திரவிழிகள்)

''இயக்கம் மிக அவசியம்
இல்லையேல் தலைமேல்
கூடுதான்
காவல் பொம்மைகள்''
(காற்றின் கைகள்)

கவிஞர் தாம் கண்ட காட்சி விவரணைகள் இவை. ஸானின் எனும் ஜப்பானிய ஹைகூ புலவன் காட்டும் ஹைகூவினுள்

வெளித் தெரியாமல் இயங்கும் நகர்ச்சியே நாம் புரிந்து கொண்ட யதார்த்த ஹைகூ.

''தொலை தூரத்து வயல்
வெளியில்
வயற்காட்டுப் பொம்மை
நண்பன்
நான் நடக்கத் தான் நடப்பான்''
(ஜப்பானிய ஹைகூ)

ஹைகூவில் தானாக அது நிகழவேண்டும். அன்றி அதனைத் தனக்குள் வலிந்து கட்டி இழுக்க முயன்றால், நம்மை அறியாமலேயே நாம் விலகி அதனுள் இழுபட்டு விடுவோம். ஹைகூ உதிர்ந்துபோகும்.

தன்னைப் பிரிதொன்றாக ஆவகித்துச் சொல்லும் உரை தமிழில் நாவல், சிறுகதை, நாடகம் முதலான எல்லா இலக்கியத் துறைகளிலும் படைக்கப் படுவதுண்டு.

களத்து மேட்டில்
பதர் தூற்றுகிறார்கள்—
எனக்கொரு
முறம் தரமாட்டார்களா?
(சூரியப் பிறைகள்)

எனும் தமிழன்பன் ஹைகூவில் கவிதா பாத்திரம் வயற்காட்டுப் பொம்மைதானே!

தவிர,

கருங்கற்களிலும்
புன்னகைகள்
காக்கையின் எச்சங்கள்
(கூடைக்குள் தேசம்)

என்றும்,

எத்தனை கனிகளைச்
சுமந்து நிற்கின்றாய் மரமே
உன் தலையிலல்லவா
எச்சமிட்டது பறவை
(இன்னும் மகுகள்)

என்றும்—பறவை எச்சங்களும் கூட ஹைகூ பாடு பொருளாகி உள்ளன.

## சூரிய ஹைகூக்கள்

பொதுவாகக் காட்சி எழிலினை உருவகப் படுத்துவதில் தமிழ் ஹைகூக் கவிஞர்கள் கருத்தோட்டம் சில இடங்களில் ஒரே மாதிரி அமைகின்றது.

விடியல் முதல் கணிப்பு
வெறுப்புற்றுத் துப்பினான்
வெய்யோன்
சிவந்து போனது வான்
(காற்றின் கைகள்)

இரத்தம் வடிய தோலைக்
கிழித்து இப்படியா பார்ப்பது
விடியல்
(கூடைக்குள் தேசம்)

விடிவானம் மட்டுமல்ல அந்தி வானும் அப்படியே.

படிப்பகம்

www.padippakam.com



வரப்புகளற்ற வானிலுமா
பிரச்சனைகள்
பார் ரத்தச் சேறு
(ஹைகூ கவிதைகள்)

வானப் பாடையில்
தீயின் பிணம்
அந்திச் சூரியன்
(தீயின் பிணம்)

இரத்தம் ஒழுகிய பாதை
யார் மீது ஏறியது
சூரியச் சக்கரம்
(தீயின் பிணம்)

இங்ஙனம் செக்கச் செவேலெனும் மாலை வானைத்தீட்டுவது ஒரு புறமிருக்க, மஞ்சள் நிறத்தில் தோன்றும் அந்தியின் மேலைத் திக்கினைக் குறித்தும் ஹைகூக் கவிஞர்கள் அக்கறை கொண்டுள்ளனர்.

''குளத்து நீரில்
மஞ்சள் கரைத்துக்
குளிப்பது மாலை பெண்ணா?''
(இலையுதிர்காலம் நிரந்தரமல்ல

''வெண்பட்டுத் துணியில்
யார் தெளித்தார் மஞ்சள்?
அந்தி'' (இன்னும் மக்கள்)

இந்த மாலைத் தீயில் மேகக் கூட்டம் பற்றி எரியாத நிலை.

''தீயை முத்தமிட்டும்
எரியாப் பஞ்சுப் பொதிகள்
வெண்முகில்கள்''
(கூடைக்குள் தேசம்)

என்ற ஹைகூவில் பளிச்சிடுகின்றது. இந்தப் புதிர் ஹைகூ ''பார் சுடர் பரிதியைச் சூழவே படர்முகில் எத்தனை தீப்பட் டெரிவன'' என்ற பாரதி கவிதையினை நினைவூட்டுகின்றது.

கவிதைக்கு ஒரு பிரமாண்டமான தலைப்பு என்று தேடும் போது பொதுவாகவே எரிமலை, சூரியன், அக்னி, நெருப்பு போன்ற பெயர் உரிச்சொற்கள் போட்டியிட்டுக் கொண்டு முன்னுக்கு வரும்.

'சூரியப்பிறைகள்', 'சூரியச் செதில்கள்' என்ற பெயர்மேலேயே ஹைகூத் தொகுதி நூல்களும் வந்துள்ளன.

எனினும் பரிமள முத்துவின் இந்த ஆடம்பரமில்லாத ஹைகூ சுவை தனி.

''குளத்து நீரில்
சேலை அலசும் காற்று
சூரிய வெளிச்சம்''
(கவிதாசரண் மே 92)

''வானப் பாடையில்
தீயின் பிணம்
அந்திச் சூரியன்''
(தீயின் பிணம்)

''மேற்குச் சுடுகாட்டில்
சூரிய மரணம்
திசையெங்கும் கறுப்புக்கொடி''
(சிறகுகளின் சுவடுகள்)

## பனித்துளிப் பாக்கள்

சூரியனின் அவதாரத் தெறிப்புகளாகப் படும் பனித்துளிகள் தமிழ் ஹைகூக்களைச் சொட்டச்சொட்ட நனைத்துவிட்டன.

''கவியில் மட்டுமல்ல
தரையெல்லாமும் ஹைகூக்கள்
சூரியப் புள்ளியாய் பனி''
(காற்றின் கைகள்)

''முள்ளின் முனை யெங்கும்
மொட்டு மொட்டாகச் சூரியன்
மின்னும் பனித்துளிகள்''
(காற்றின் கைகள்)

அமுதபாரதியின் வரிகளைத் தன்வயமாக்குகிறார் சந்திரசேகரன்.

''அதிகாலையில் சூரியன்
உடைந்து கிடந்தது
புற்களின் நுனியில்
(கிழக்கு, செப்-அக், '91)

இந்தப் புல்நுனி, பனித்துளி, வானம், சூரியன் எல்லாமே கவிஞர்களின் மரபான விஷயங்கள்.

படிப்பகம்

www.padippakam.com



'புல்லின் நுனியில் பனித்துளி' என்றொரு ஹைகூ நூலே உண்டு.

"நுனிப்புல்
பனித்துளி அதில்
சிறைப்படும் ஆகாயம்"
(வைரப்படிகங்கள்)

என்கிற நெல்லை சு. முத்துவின் ஹைகூ பதிமம்,

"என் கைப்பிடிக்குள்ளும்
அகப்பட்டுக் கொள்கிறது
ஒரு துண்டு ஆகாயம்"
(நட்சத்திர விழிகள்)

என்னும் கழனியூரனின் ஹைகூ மாதிரியே அமைந்துவிட்டது.

பனித்துளியினை கண்ணீர் என்றும் வியர்வை என்றும் குறிக்கும் சில இயல்பான கவிதைகள் தமிழில் உண்டு.

'இரும்பு கூடவா கண்ணீர்
வடிக்கும்
அதிகாலையில்
பீரங்கி நுனியில் பனித்துளி"
(புள்ளிப்பூக்கள்)

"சூரியச் சுடர் சுட்டுவிட்டதோ
புல்லின் கண்களில் தேங்கும்
கண்ணீர்த்துளி"
(இலையுதிர்காலம் நிரந்தரமல்ல

"வெளிய குளிரில்
புல்லுக்கு மட்டும்
வியர்த்தது எப்படி?"
(டி. விஜிஹா-நடன மலரில்)

## கொன்றை ஹைகூ

ஜப்பானிய மரபு வழிக் கவிதையான ஹைகூவில் அந்நாட்டுக் கலாசாரக் கூறுகள் தோய்ந்திருக்கும் தமிழ்ப் பாக்களும் அமைதல் சிறப்பு. எனினும் ஒரே மாதிரியான கருத்து வெளிப்பாடுகள் அதன் வளர்ச்சிக்கு முடையாகும்.

தீக்கொன்றைப் பூக்கள் குறித்த பாக்கள் இவை:

"காற்று விசிறிவிட
தீக்கங்கு உதிர்கின்றது
கொன்றை மரத்தினின்று"
(சூரியச்செதில்கள்)

"அட இதென்ன
ஒரே பிழம்பாக
தீக்கொன்றை" (இவின் தாகம்)

ஹைகூவானது கவிஞரின் சுயானுபவமாக வெளிப்பட வேண்டும். கி.பி 1693ஆம் ஆண்டில் சரோ என்கிற தன் சீடருடன் ஜப்பானின் வடக்குப் பிராந்திய கிராமங்களுக்குப் பயணம் செய்த போது. தாம் கண்ட காட்சி யனுபங்களை ஹைகூவாகச் செல்லுமிட மெங்கும் சுவர்களிலும் கற்பாறைகளிலும் செதுக்கினார் பாஷோ. நாற்று, நிலவொளி, செர்ரிப் பழங்கள், சில்வண்டுகள், சோளப் பொம்மைகள் என்றெல்லாம் நாகரிக வாடை படாத நாட்டுப்புற அடையாளங்களே இவரது ஹைகூ தொடு பொருள்கள்.

தவிர இவரது கவிதையில் வாழ்வின் ஒரு வித சோகம் இயல்பாக இழைந்தோடும். இறந்து போன தன் தாயின் நரைத்த தலை முடியை நினைவுப் பொருளாக எடுத்து வைத்திருந்து, தம்பி தன் அண்ணன் பாஷோவிடம் காட்டினான். அதைக் கண்டதும் கண் கலங்கிய பாஷோ வடித்த ஹைகூ இப்படி:

"கையிலெடுத்தேன்
வெப்பக் கண்ணீரில் கரைந்தன
இலையுதிர் காலப்
பனித்துளிகள்"

வெள்ளைத் தலைமுடி கண்ணீரின் வெப்பத்தில் கரைகின்றதாம் பனித் துளிகளாக! இதுவே ஹைகூ உள்ளுருவம்.

நாம் காணும் ஒவ்வொரு பொருளும் ஹைகூ ஆகலாம். ஆனால் ஒரே பொருளே ஹைகூவாதல் சிறப்பில்லை.

*அடுத்த இதழில் நிறைவு பெறும்.*

படிப்பகம்

www.padippakam.com

# உதிரிப் பூக்கள்

**வனா. கனா.**

மனிதர்களிடம் பொதுவாக மனிதத் தன்மை என்பது காணப்படுவதே யில்லை. சக மனிதனிடம் அன்பு, அனுதாபம், நட்புணர்வு காட்டுகிறவர்கள் மிகக் குறைவாகவே காணப் படுகிறார்கள்.

இன்னொருவன் வாழ்க்கையில் அடி பட்டால், எவ்வகையிலாவது காயம் பட்டால், அருகில் இருப்பவர்கள்-தெரிந்தவர்கள், வேண்டியவர்கள், உறவினர்கள், அண்டை அயலார் முதலிய பல வகையினரும், அவனுக்குத் தேவைப்படுகிற அன்பை, பரிவை, அனுதாபத்தைக் காட்டத் தயாராக இருப்பதில்லை.

மாறாக, பார்த்துச் சிரிப்பதில், பரிகசிப்பதில், கேலி பேசி மகிழ்வதில், குத்தலாகவும் குதர்க்கமாகவும் உரையாடிக் களிப்பதிலேயே உற்சாகம் காட்டுகிறார்கள் பெரும்பாலோர். பாதிக்கப்பட்டவனின் மனநிலை, உணர்வுகள் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. தங்களுடைய போக்கினால், காயம் பட்ட மனிதனின் வாழ்க்கை எப்படி மேலும் பாதிக்கப்படும் என்று மற்றவர்கள் கருதுவதில்லை. அவர்களுக்கு அந்த நேரத்திய சந்தோஷம்தான் பெரிசு.

பாதிக்கப்படுகிற மனிதன், சகமனிதர்களின் பழிப்பு, பரிகாசம், அவமதிப்பு, அவமானப் படுத்தல் முதலியவற்றால் உள ரீதியாக அதிகம் பாதிக்கப்படுகிறான். அதனால் அவனுடைய அன்றாட வாழ்க்கையும், எதிர்காலமும் வெகுவாக பாதிக்கப்படுகின்றன. தாக்குப்பிடித்து, வாழ்க்கையில் எழுந்து நின்று திடமாக முன்னேறுவதற்கு அவனுக்கு எவ்வளவோ மன உறுதியும் தன்னம்பிக்கையும் தேவைப்படுகின்றன. அவனிடம் பரிவு காட்டக் கூடிய நல்ல உள்ளங்களின் அனபும் மனித நேயமும் தேவைப்படுகின்றன.

வாழ்க்கை தினசரி உணர்த்திக் கொண்டிருக்கிற இவ்வுண்மைகளை அடிப்படையாகக் கொண்டு, என். ஆர். தாசன் நல்ல நாவல் ஒன்றை படைத்திருக்கிறார். 'அவளைப் பற்றியும் அவனைப் பற்றியும்' என்பது நாவலின் பெயர்.

திருமண நாளின் முகூர்த்த வேளையில் தெரிய வருகிறது, மணப்பெண் ஓடிப் போய்விட்டாள் என்று. மணமகனாக மேடையில் அமர்ந்திருந்த இளைஞனுக்கும், மற்றவர்களுக்கும் அதிர்ச்சி தந்த அந்த நிகழ்ச்சி அவனை பாதிக்கிறது. அவனுக்காக அனுதாபப் படுகிறவர்களை விட, அவனைப் பற்றி மட்டமாகவும் குறைவாகவும் கேலியாகவும் பேசி மகிழ்கிறவர்களையே அவன் எங்கும் எதிர் கொள்ள நேரிடுகிறது. ஆபீசில், சுற்றுப்புறங்களில், அந்த ஊரில் மட்டுமல்லாது அவன் வெளியேறித் தங்குகிற மற்ற இடங்களிலும் மற்

படிப்பகம்

www.padippakam.com



றவர்களால் அவன் மனிதாபிமனமற்று பரிகசித்துப் பழிக்கப்படுகிற அனுபவங்களே சித்திக்கின்றன. அந்த மனிதனின் மன உளைச்சளை, எண்ண ஓட்டத்தை, வாழ்க்கையின் சலனங்களை தாசன் அழகாக, சொற்கோல ரீதியில், செறிவாக சித்தரித்திருக்கிறார் இந்த நாவலில்.

காதல் என்ற மன மயக்கத்தில், ஆசை காட்டித் தன் காரியத்தை சாதித்துக் கொள்ள முற்படுகிற ஒருவனை நம்பி, சொந்தக்காரர்களை விட்டு, வீட்டைவிட்டு, ஓடிப்போகிற பெண் வாழ்க்கையில் சுகப்படுவதில்லை. அவள் கனவு காண்கிற இன்பமயமான சுக வாழ்வு வெறும் கானல் நீர்தான் என்பதை அவள் புரிந்து கொள்ள நேர்கிறது. அதற்குள் அவள் எத்தனையோ கசப்பான அனுபங்களைப் பெற்றாக வேண்டியிருக்கிறது.

இத்தகைய ஒரு பெண்ணின் கதையையும் சொல்கிறது இந்த நாவல்.

காலமும் வாழ்க்கையின் போக்கும் அவனையும் அவளையும் சந்திக்கும்படி செய்கின்றன. இருவரும் பண்பட்ட மனிதர்களாக நடந்து கொள்வதை நாவலின் முடிவு உணர்ச் சிகரமாக விவரிக்கிறது.

சமீபத்தில் நான் படித்த நல்ல புத்தகங்களில் ஒன்று என். ஆர். தாசனின் புதிய நாவல் — 'அவளைப் பற்றியும் அவனைப் பற்றியும்.'

ஃ ஃ ஃ

வாழ்க்கையையும் மனிதர்களையும் கூர்ந்து கவனிக்கிற திறமைசாலிகள் எழுத்துத் துறையில் ஈடுபடுகிற போது, புதுமையான — நேர்த்தியான — அழகான படைப்புகள் கிடைப்பது சாத்தியமாகிறது. வாழ்க்கை வளங்கள் வஞ்சிக்கப்பட்டிருக்கிற பிரதேசங்களில் அவர்கள் வசிக்க நேர்ந்தாலும் கூட, அவர்கள் தங்கள் மண்ணையும் மக்களையும், மண்ணின் தன்மைகளையும் மனிதரின் இயல்புகளையும் பற்றி, நல்ல நல்ல கதைகளைத் தரமுடிகிறது. அவர்களுடைய எழுத்தில் ஒரு தனித் தன்மை கலந்து கிடக்கிறது.

வேல. ராமமூர்த்தி என்ற எழுத்தாளரின் கதைகளில் இப்படிப்பட்ட தன்மைகளைக் காணலாம். கிராம மக்களின் பண்புகளை, பழக்க வழக்கங்களை, வாழ்க்கை தவிப்புகளை கிராமியத் தன்மையோடு எடுத்துச் சொல்கின்றன அவருடைய சிறு கதைகள். அவருடைய கிராமத்தின், சுற்று வட்டார ஊர்களின், சாதாரண மக்களது ஆசைகளை, சிரமங்களை, ஏக்கங்களை, ஏமாற்றங்களை — அவர்களது வாழ்வின் சிறுசிறு அம்சங்களை எல்லாம் — அவர் கதைகள் உயிர்ப்புடன் கூறுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



'சேமித்துப் பழக்கம் இல்லை. பல்லி இரை தேடும் கதை தான். ஒரு பூச்சி கிடைத்தால் இன்றைய பொழுது கழிந்தது. நாளையும் ஒரு பூச்சி கிடைக்கும்.'

'மலங்காட்டை விட்டுத் தப்பிப் பறந்து வரும் மாம்பழத் தான் குருவி மாதிரி திரேகக் கட்டு. உள்ளங்கையில் வைத்து உருட்டி விளையாடத் தூண்டும் அழகு.'

'மகளை நிச்சயம் பண்ண வரும் மாப்பிள்ளையைக் கண்டது போல், மழையைக் கண்டதும் சம்சாரிகளுக்கு சந்தோஷம்.'

'அழகு மீனாவின் காதுகளில் பளாச்சுளை போல் தண்டட்டி தொங்கியது ஒரு காலம். இப்போது சின்ன ஆட்டு மடிக் காம்புகளைப் போல் சிறுத்து இருந்தன.'

'வீட்டுக்குப் புதிதாய் வந்த விருந்தாளி போல் சூடேறாத அடுப்பில் சொகுசாக உட்கார்ந்திருந்தது மண்பானை.'

'உவர் மண்ணில் முக்கிப் பிழிந்து, வெள்ளாவியில் வைத்து அவித்து, துவைத்துக் காயவைத்த துணி போல் வெதுவெதுப்பும் மண்வாடையும் அகலாத யௌவனம்.'

இப்படி புதுமையான, நயமான கிராமிய ரீதியான உவமைகளை வேல. ராமமூர்த்தியின் கதைகளில் காணமுடிகிறது. அதே போல் வாழ்க்கை உணர்த்தும் உண்மைகளை எளிமையாக, அழகாகச் சுட்டுகிறார் அவர் தன் எழுத்துகளில்.

'அப்பா ஒரு நல்ல பூட்டு. எல்லா அப்பா, அம்மாக்களுமே பூட்டுப் பிறவிகள்தான்.'

'சுயப்பிரக்ஞை உள்ள எந்தப் பெண்ணும் கண்டதும் காதல் வசப்பட்டு கற்பிழந்து போகமாட்டாள்.'

'உறங்குவதில் சுகம் இருக்கிறது. விழித்திருந்து வேடிக்கை பார்ப்பதில் சந்தோசம் இருக்கிறது.'

'பொண்ணு இல்லாமல் நகையைமட்டும் கொடுத்தால் வாங்க ஆயிரம் பேர் வருவான். நகையில்லாமல் பொண்ணைக் கட்ட ஒருத்தன் வர மாட்டான்.'

இவ்விதம் ரசமாக எழுதுகிற வேல. ராமமூர்த்தியின் இரண்டாவது கதைத் தொகுதி 'நீஞம் றெக்கை'யை அண்மையில் படித்தேன். மனநிறைவு தந்தது. ஃ

---

**அறிவிப்பு!**

தாமதம் காரணமாக

**நினைவுத் தடங்கள்**

இந்த இதழில் இடம் பெறவில்லை. வருத்தம்.

படிப்பகம்

www.padippakam.com

# காவிரியல்ல; இது கூவம்

அன்று மாலை அந்த நண்பரும் நானும் தாம்பரம் செல்வதற்காகக் கோட்டை இரயில் நிலையத்தை அடைந்தோம். நண்பர் என்னை ஸ்டேஷனுக்குள்ளே போய் நிற்கச் சொல்லிவிட்டு டிக்கட் வாங்குவதற்காகப் பின் தங்கினார். நான் உள்ளே நுழைந்து அங்கிருந்த புத்தகக் கடையை நோட்டம் விட்டேன். அப்போது, "அண்ணா," என்று அழைத்துக் கொண்டு என் கையைப் பற்றினாள் ஒரு சிறுமி. அவளுக்கு ஐந்து அல்லது ஆறு வயதிருக்கலாம். அழுக்குப் படிந்த ஆடையும் சிக்குப் பிடித்த தலையுமாகத் தோன்றினாலும், துறுதுறுவென்ற கண்களும் எழுதி வைத்தது போன்ற முகமுமாக அழகாகவே இருந்தாள். என்னால் அவளைக் கடிந்து கொள்ள முடியவில்லை.

"என்னம்மா?" என்று கேட்டேன்.

அவள் என் கைகளில் செல்லமாக ஊஞ்சலாடியவளாய், "காசுண்ணா," என்றாள். எனக்கு அது பெருமையாகவே இருந்தது. சட்டைப் பையில் கை விட்டுத் தேடி, கிடைத்த சில்லறையை அவள் கையில் கொடுத்தேன்.

அப்போது அங்கே வந்த நண்பர், "அடடே, என்ன ப்ரதர் இது?', என்றார். அந்தப் பெண் ஓடி விட்டாள். எதைக் கேட்கிறார் என்று விளங்காமல், "என்னங்க?" என்றேன்.

"இப்படியெல்லாம் பிச்சை போடக் கூடாது. உமக்குச் சென்னையைப் பத்தி ஒன்னும் தெரியாது," என்றார். எனக்குச் 'சப்'பென்றாகிவிட்டது. பிச்சை போடுவதற்கும் சென்னையைத் தெரிந்து கொள்வதற்கும் என்ன சம்பந்தம் என விளங்கவில்லை. உண்மையிலேயே எனக்குச் சென்னையைத் தெரியாதுதான். சென்னைக்கு வந்து நான்கு நாட்களே ஆகின்றன. ஆனால், பிச்சை போடுவதற்குரிய மனமும் கையில் காசும் அப்போது என்னிடம் இருந்தன.

நண்பர் என் தோள் மேல் கை போட்டுக் கொண்டு சொன்னார்: "பிச்சை போடறது நல்ல காரியந்தான். ஆனா, நம் முன்னோர்கள் சும்

படிப்பகம்

www.padippakam.com



மாவா சொன்னாங்க, 'பாத்திரமறிந்து பிச்சையிடு'ன்னு? நீர் இப்போ ஒரு சிறுமிக்கு பிச்சை போட்டீர். அதன் மூலமா உம்மையறியாம ஒரு சிறுமைக்கு விதை போட்டுவிட்டீர்."

நான் திடுக்கிட்டு, "என்ன சொல்றீங்க?" என்றேன்.

"ஆமா ப்ரதர். அதான் சென்னை. அந்தச் சிறுமி ஒரு தூது. உம்மை ஆழம் பார்க்கப் போடப்பட்ட ஒரு தூண்டி முள். எல்லாம் அதான். விபச்சாரந்தான்."

என் உடம்பு கிடுகிடுவென்று ஆடிவிட்டது. சென்னை பூதாகாரமாய்த் தோன்றி என்னை நடுக்கியது. நான் ஒடுங்கிப் போனேன். நல்ல வேளை, இரயில் வந்துவிட்டது. நான் தாவிச் சென்று ஏறிக்கொண்டேன். நண்பர் மெல்ல ஏறி வந்து ஆதரவோடு என்னைத் தட்டிக்கொடுத்துச் சிரித்தார். அந்தக் கணத்தில் அவர் சிரிப்பே எனக்குப் பேய்ச் சிரிப்பாகத் தோன்றியது. மனிதர் என்ன நறுக்காய், நாசுக்கில்லாமல் சென்னையைப் புரிய வைத்துவிட்டார்!

அந்த நிகழ்ச்சி அடுத்த சில நாட்கள் என்னைப் பிசாசு போல் மிரட்டிக்கொண்டிருந்தது. ஓய்வாகச் சென்று கடற்கரையில் ஒரு மாலையில் உட்கார்ந்தபோதும் அந்த நிகழ்ச்சியிலேயே மனம் பொருந்தியிருந்தது. அந் நிகழ்ச்சி என்னை மெல்ல மெல்ல ஜீரணித்துக் கொண்டிருப்பது போல் அடிக்கடி என்னுள் ஒரு பீதி படர்ந்தது. அதிலிருந்து விடுபட வேண்டுமானால், சென்னையில் கிடைத்துள்ள வேலையை உதறிவிட்டு என்னுடைய ஊருக்கு ஓடுவதைத் தவிர வழியில்லை.

எவ்வளவு நேரம் அந்த நினைவில் சிக்கிக் கிடந்தேனோ.

"அண்ணா," என்ற குரல் என்னைத் திடுக்கிட வைத்தது. என் கண்கள் ஒரு கணம் பொறி கலங்கிவிட்டன.

அன்று பார்த்த அதே சிறுமி என் முன்னே கை நீட்டி நின்றாள். என் நண்பரின் வார்த்தைகளை மெய்ப்பிப்பதே போல் சற்றுத் தூரத்தில் பாவத்தின் நிழல்போல நின்றுகொண்டிருந்தாள் ஒரு மாது.

எனக்கு வந்த ஆத்திரத்தில், "சீ போ," என்று அந்தச் சிறுமியைப் பிடித்துத் தள்ளிவிட்டேன். 'வீல்' என்று கத்திக்கொண்டு எகிறி விழுந்த குழந்தையைப் பதறியடித்து ஓடி வந்து வாரியெடுத்துக்கொண்டாள் அந்த மாது. நான் பயந்துவிட்டேன். விபரீதமாக ஏதாவது நடந்துவிடுமோ என்று உடல் நடுங்கியது.

—அடுத்த இதழுக்குச் சில பக்கங்கள்.

படிப்பகம்

www.padippakam.com

# பயிர்

ருசிக்காக உண்பது என்றானவுடன் உப்பு புளி மிளகாய் இல்லாமலா? காரம், மணம், குணம் என்று தேடத் தேட, செரியாமை, ஒவ்வாமை, இயலாமை என்று நோய் நொடிகள் கூடி வந்து, நம்மில் இளைப்பாற பந்தல் போடும்தானே. இப்பந்தலுக்குள்ளே குந்திக்கொண்டு ருசியை நாம் புசிக்கிறோமா? ருசி நம்மைப் புசிக்கிறதா?

பிஞ்சு வெள்ளரிக்காய்க்கு உப்புத்தூள் தொட்டுக் கொள்வதும், தென்னை இளநீருக்கு குளுகோஸ் சேர்த்துக்கொள்வதும், இனிப்புப் பலாச்சுளைக்கு கொம்புத்தேன் ஊற்றிக்கொள்வதும் கூடுதல் ருசிக்காக மட்டுந்தானா? நோயின் பசிக்காகவும்தான். பக்குவமாய் சமைத்துண்ணத் தொடங்கியபோதே உடலின் பக்குவம் தொலைந்துபோனது. மனசும் பக்கவாதம் வந்து முறுக்கிக்கொண்டது.



உண்ணும் பக்குவத்தில் இயற்கை நமக்களிக்கும் காய் கனிகளைத் தேடி உண்கிறவன் கோடியில் ஒருத்தன்கூட இல்லை. ஞானத் தேடலுக்கும்தான். “இதெல்லாம் இந்த யுகத்தில சரிப்படுங்களா?” என்று வக்கணை பேசுகிறோம். யுகம் நமக்காகவா? யுகத்துக்காக நாமா?

செத்துப்போவது எப்போதும் இருக்கிறதுதான். ஆனால், அழிந்து போவதற்கு ஏன் இந்த அவசரம்? யோசிக்க வேண்டாமா?

இப்படியாகத்தான், வாழ்க்கையை அனுபவிக்கும் ருசிகளாக நாம் சேமித்தவையெல்லாம் கோபதாபங்கள், பொய் பித்தலாட்டங்கள், திருட்டு புரட்டுகள், வீம்பு வீராப்புகள், கொள்ளையடிக்கும் வஞ்சக விளையாட்டுகள்தாம்.

இலக்கியவாதிகளின் ஞானத் தேடலே இந்த ருசிகளின் ஊடேதான்.

சராசரி மனிதனுக்கு வாழ்க்கையின் அர்த்தம் தேடலிலும் விரியலாம்; தின்பதிலும் முடியலாம்.

படிப்பகம்

www.padippakam.com

Kavithaasaran, May 1993. Regd. No. TN/MSN/746
CREATIVE LITERARY MONTHLY IN TAMIL. R. Dis. 5479/90

படைப்பிலக்கிய வெளியீட்டாளர்கள்:

மூசா இலக்கியம்

MUSA ILAKKIYAM

31, டி.கே.எஸ். நகர், சென்னை-600019

சந்தாதாரர் ஆகுங்கள்
சந்தாதாரர் ஆக்குங்கள்

படிப்பகம்